வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

வார மலர்


Email : news@eelanadu.lk

மலர் : 05

14.07.2024 ஞாயிற்றுக்கிழமை

இதழ் : 196

பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram money transfer - மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER - றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER - வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

## தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது மாநாடு யாழில்

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் இடம்பெற உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு தந்தை செல்வா கலையரங்கில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகம் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சீ.வீ. விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற

15

## கூட்டமைப்பு பாராளுமன்ற குழு தலைவரை நியமிப்பதில் சிக்கல்!

### செல்வத்தை தலைவராக்க தமிழரசு எதிர்ப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 14

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுவின் தலைவரை தெரிவு செய்வதில் பல்வேறு நெருக்கடிகள் தோன்றியுள்ளன.

இதுவரை காலமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்த இரா.சம்பந்தன் காலமான மையை அடுத்து இந்தப் பதவி வெற்றிடமாகியுள்ளது.

இந்தப் பதவிக்கு தம்மைத் தெரிவு செய்யும்படி டெலோவின் தலை வர் செல்வம் அடைக்கல நாதன் வலியுறுத்தி வந்த

15

## விலகுகிறார் தம்மிக்க?

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குவதற்கு பொதுஜன பெரமுன கட்சி தனக்கு ஆதரவு வழங்காவிட்டால் அரசியலில் இருந்து விலகுவதற்கு பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா திட்டமிட்டுள்ளார் என அறிய முடிகின்றது.

15

# தமிழ் பொதுவேட்பாளர் மூலம் தமிழர் ஒற்றுமை வெளிப்படும்!

## நாங்கள் ஓரணியில் உள்ளோம் என்பதை மீண்டும் எடுத்துரைக்க நல்ல சந்தர்ப்பம் என்கிறார் மாவை



யாழ்ப்பாணம், ஜூலை 13

**"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதன் மூலம் தமிழ் மக்கள் மீண்டும் ஒன்றுபட்டு ஓரணியில் நிற்கிறார்கள் என்பதை அனைத்து தரப்புக்கும் எடுத்துச் சொல்வதற்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையில் தமிழ்ப் பொதுவேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தும் முடிவை நான் வரவேற்கிறேன்."**

- இவ்வாறு தெரிவித்துள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.

தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை ஒரு மக்கள் ஆணை பெறும் விடயமாக அல்லாமல் நாங்கள் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்பதை மீண்டும் தெளிவாக எடுத்துரைப்பதற்கான சந்தர்ப்பமாக பயன்படுத்தலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

டான் தொலைக்காட்சியில் பிரதி ஞாயிறு தோறும் இரவு 7 மணிக்கு ஒளிபரப்பாகும் ஸ்பொட்லைட் நிகழ்ச்சியில்

15

## வலுவான பொருளாதாரத்துக்கு அடித்தளத்தை இட்டுள்ளது அரசு!

### ஜனாதிபதி ரணில் பெருமிதம்

கொழும்பு, ஜூலை 14

ஏற்றுமதி பொருளாதாரம், உற்பத்தி, சுற்றுலா, தொழில்நுட்பத் துறை, நவீன விவசாய முறை ஆகியவற்றின் ஊடாக நாட்டுக்குள் வலுவான பொருளாதாரத்தைக் கட்டமைக்க முடியும் எனவும் அதற்கான அடித்தளத்தை அரசாங்கம் இட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாட்டில் புதிய ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுவூட்டும் வகையில் புதிய முதலீடுகளை ஸ்தாபிக்கப்படும் எனவும் உறுதியளித்தார்.

இலங்கையின் மிகப் பெரிய ஏற்றுமதி

15

## ஜனாதிபதி ரணிலுக்கு மேலும் 5 ஆண்டுகள் வழங்கவேண்டும்!

### கோருகிறார் அமைச்சர் அலி சப்ரி

கொழும்பு, ஜூலை 14

நாட்டை மீட்டெடுத்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு மேலும் ஐந்தாண்டுகள் வழங்கப்பட வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

பொருளாதார நெருக்கடியில் இருந்து இலங்கை மீண்டுவந்துள்ளமை தொடர்பில்

15

## யாழ்ப்பாணத்தில் சூரியசக்தி மின்சாரம் வழங்கலில் முறைகேடு!

### மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சிடம் அறிக்கை கோருகிறது ஜனாதிபதி செயலகம்

யாழ்ப்பாணம்,ஜூலை 14

யாழ். மாவட்டத்தில் சூரியசக்தி மின்னிணைப்பு வழங்கலில் முறைகேடுகள் இடம்பெறுவதாக ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதை அடுத்து குறிப்பிட்ட முறைப்பாடு தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுமாறு மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரிடம் ஜனாதிபதி செயலகம் கோரியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிராந்திய மின் இணைப்புப் பொறியியலாளர் காரியாலயத்தில் சூரியசக்தி

15

## அமிர்தலிங்கம் நினைவு தினம் பண்ணாகத்தில்!

யாழ்ப்பாணம்,ஜூலை 14

முன்னாள் எதிர்கட்சி தலைவர் அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் 35 ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று நடைபெற்றது.

பண்ணாகம் கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் பண்ணாகம் அண்ணா கலைமன்றம் ஆகியவற்றின்

15

## 19 ஆவது திருத்தச் சட்டம் முறையாகவே நிறைவேற்றம்!

### அமைச்சர் விஜயதாஸ சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தெளிவாக தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே, நீதிமன்ற கட்டமைப்பை நகைச்சுவையாக்கும் வகையில் சில சட்டத்தரணிகளும், மனுதாரர்களும் செயற்படக்கூடாது என்று நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

19 ஆவது அரசியலமைப்பு திருத்தம் உரிய

15

## பெரமுன வேட்பாளர் பெயர் இம்மாத இறுதியில் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொதுஜன பெரமுனவின் வேட்பாளரின் பெயர் இம்மாத இறுதியில் அறிவிக்கப்படும் என பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் கட்டமைப்பும் வியூகமும் ஜனாதிபதி வேட்பாளரை 4 முதல் 6 வாரங்களுக்குள் வெற்றிபெறச் செய்யும் அளவுக்கு பலமாக இருப்பதாகவும் நாமல் கூறியுள்ளார்.

15

## தேர்தலுக்கு எதிரான மனு நாளை விசாரணைக்கு!

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி தேர்தல் தொடர்பாக சட்டத்தரணி அருண லக்சிறி தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மனுவை மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் பரிசீலிப்பதற்கு உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது

இதன்படி நாளை குறித்த மனுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

15

## ஜனாதிபதித் தேர்தலில் இருந்து இறுதியில் பின்வாங்குவார் சஜித்!

### கூறுகிறார் பாலித ரங்கே பண்டார

கொழும்பு, ஜூலை 14

ஜனாதிபதி தேர்தல் சமரிலிருந்து இறுதி நேரத்தில் சஜித் பின்வாங்கக்கூடும் எனவும், டலஸ் அழகப்பெருமவே வேட்பாளராகக் களமிறங்கக்கூடும் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமரர் கல்கியின் யாழ்ப்பாண ஞாபகங்கள் - 4

# கொழும்பு மேயர் டாக்டர் சரவணமுத்து யாழ்ப்பாண, கொழும்பு, மலையக தமிழர்கள் ஒற்றுமைப்பட்டால் அவர்களை எவரும் உதாசீனம் செய்துவிட முடியாது!

- அனந்தபாலகிட்ணர்

அன்றைய இலங்கை தமிழ் பிரமுகர்கள் என்று கூறும் போதே முதலில் டாக்டர் எஸ். சரவணமுத்து நினைவில் வருகின்றார். அவருடைய தோற்றம், முக லட்சணம் என்பவை புராதன ரோமா புரி வீரர்களது கம்பீரத் தோற்றத்தையே எமக்கு ஞாபகப்படுத்தும்.

டாக்டர் எஸ். சரவணமுத்து பொது வாழ்விலும் முக்கியத்துவம் பெறுகின்றார். டாக்டர்.எஸ். சரவணமுத்து ஒரு பிரபல குடும்ப பின்னணியைக் கொண்டுள்ளார். அவருக்கு நான்கு சகோதரர்கள். சகலரும் உயர் பதவிகளை வகிக்கின்றனர்.

பிரிட்டிஷ் கவனர் அதாவது, ஆளுநர் முதன் முறையாக கொழும்பு துறை முகத்தில் வந்திறங்கிய போது அன்று கொழும்பு மேயர் பதவி வகித்த டாக்டர் எஸ். சரவணமுத்து, அவரை நேரில் சென்று வரவேற்றார். அன்றைய தினம் கொழும்பில் பெரிய கிரிக்கெட் பந்தய மொன்று இடம்பெற்ற வண்ண மிருந்தது. அந்த ஆட்டத்தை பார்வையிட கவர்னர் சென்றார். அங்கே அந்த கிரிக்கெட் மைதா னத்தின் தலைவரான பி. சரவணமுத்து அவரை எதிர் கொண்டு வரவேற்றார். இதன் பின்னர் கவர்னர் மைதானத்தினுள் நுழைந்ததும் இலங்கை கிரிக்கெட் அணியின் கப்டனான எஸ். சரவணமுத்து அவரை வரவேற்றார். அப்போது அந்த பிரிட்டிஷ் கவனர் "இதுவென்ன ஆச்சரியம், இலங்கையில் பார்க்குமிட மெல்லாம் சரவணமுத்து மயமாகவே இருக்கின்றது" எனக் குறிப்பிட்டாராம்.

டாக்டர் சரவணமுத்து யாழ்ப்பாணத்தை பூர்வீகக் கொண்டவரான போதிலும் ஒரு கிறிஸ்தவர். ஆயினும் பகவத் கீதை இவருக்கு அத்துப்படி. ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர்மீது இவருக்கு மிகுந்த பக்தி காணப்பட்டு கின்றது. இவர் ஓர் இந்திய அபிமானி. இந்தியாவில் அந்நாட்களில் நடக்கும் ஒவ்வோர் அரசியல் நிகழ்வுகளும் டாக்டர் சரவண முத்துவிடம் பிரதிபலிக்கவே செய்யும்.

இலங்கையில் தாழ்த்தப்பட்ட சமூகத்தவரின் ஆலய பிரவேசத்துக்கு ஆதரவளித்த சமாச்சாரத்தில் சிறைசென்ற பிரமுகர் இவர்தான். மகாத்மா காந்தி இந்தியாவில் உண்ணாவிரதமிருந்த போது டாக்டர் சரவணமுத்து கொழும்பு செட்டியார் தெருவில் உள்ள ஸ்ரீ முத்து விநாயகர் கோவில் முன்றலில் காந்திக்கு ஆதரவாக உண்ணாவிரதமிருந்தார். அச்சமயம் பொலிஸ் உத்தரவை மீறினார் என்ற குற்றச்சாட்டில் நீதிமன்றினால் அவருக்கு அபராதம் விதிக்கப்பட்டது. ஆனால், அந்த அபராத தொகையைச் செலுத்த மறுத்து டாக்டர் சரவண முத்து ஒரு நாள் சிறைவாசம் சென்றார்.

இலங்கை அரசியலில் இவர் ஒரு தேசியவாதி. அதாவது, "இந்தியர்களுடைய தனி உரிமைகளை அதிகமாக வற்புறுத்தக்கூடாது. இலங்கையின் அரசியல் விடுதலையையே வற்புறுத்த வேண்டும்" என்ற கட்சியைச் சேர்ந்தவர். சிங்கள அரசியல்வாதிகளில் சிலர் மட்டுமே துவேசிகள் என்றும், சாதாரண சிங்களவர்கள் நல்லவர்கள் என்றும் அவர்களிடையே இந்திய துவேசம் இல்லை என்றும், அவர்கள் மத்தியில் தகுந்த பிரசாரம் செய்தால் இலங்கையில் இனத்துவேசத்தை அகற்றி விடலாம் எனவும் கருதுகின்றவர்.

இத்தகைய நிலைப்பாட்டுக்கு தமது சொந்த அனுபவத்தையே அவர் உதாரணமாக காட்டுகிறார்.

இலங்கை அரசாங்க சபைக்கு 1931ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் கொழும்பு வடபகுதி அபேட்சகராக டாக்டர் சரவணமுத்து நின்றார். அத்துடன் வெற்றியும் பெற்றார். ஆனால், தேர்தலில் சட்ட விரோதமான முறையைக் கையாண்டதாக அவரை எதிர்த்து போட்டியிட்டவர் வழக்குத்தொடர்ந்தார். இவ்வழக்கில் சரவணமுத்து தோற்றார். தேர்தல் ரத்தானது. அத்துடன், சரவணமுத்து சிலகாலம் தேர்தலில் போட்டியிடலாகாது எனவும் தீர்ப்பில் கூறப்பட்டது.

இதன்பின்னர் அவரது தொகுதியில் மறுதேர்தல் நடந்தது. இத்தடவை சரவணமுத்துவின் மனைவியார் அபேட்சகராக நின்று வெற்றி பெற்றார். அவருக்கெதிராகவும் தேர்தல் ஆட்சேப மனு போடப்பட்டது. ஆட்சேப தேர்தல் ரத்தாகியது. ஆனால், நல்ல வேளையாக அவர் மறுபடியும் நிற்கலாகாது என்று உத்தரவு போடப்படவில்லை.

எனவே, திருமதி சரவணமுத்து மறுபடியும் தேர்தலில் நின்றார். முன்பைவிட அமோக வெற்றி. பின்னர் 1936ஆம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலிலும் அவரே வெற்றியீட்டி., இலங்கை அரசாங்க சபையில் ஒரேயொரு பெண் பிரதிநிதியாக தெரிவானார்.

இவ்வாறு கணவனும், மனைவியும் பெரு வெற்றி பெற்றதில் உள்ள முக்கியத்துவம் என்னவென்றால், அவர்களது தொகுதியில் பெரும்பான்மையானோர் சிங்களவர்களே. எனவே, இவர்களை எதிர்த்து நின்ற சிங்கள அபேட்சகரை சிங்களவர்களது வாக்குகளினாலேயே இவர்கள் பெரும்பான்மை பலத்தோடு தோற்கடித்தர்கள்.

இலங்கையில் எம்மோடு பரிவோடு பழகியவர்களில் சரவணமுத்து தம்பதியரையும் குறிப்பிட வேண்டும். கடற்கரை ஓரத்தில் சிறு ஆச்சிரமம்போன்று அமைந்திருந்த அவர்களது இல்லத்தில் அவர்களை நாம் பார்த்தோம். அப்போது எம்மை கவர்ந்தது, அவர்களது எளிமையான வாழ்க்கைதான். டாக்டர் சரவணமுத்துவுக்கு அவரது மனைவியார் தகுந்த வாழ்க்கைத்துணையாக விளங்கினார். அப்பெண்மணி நடை உடை பாவனை அனைத்திலும் ஓர் உத்தம இந்து பெண்ணாகவே காட்சி தந்தார்.

இலங்கைத்தமிழர்களை மூன்று பிரிவாக பிரித்துப்பார்த்தேன். இவர்களில் யாழ்ப்பாணத் தமிழரிடம் சிறந்த கல்வியறிவொடு, அறிவுக்கூர்மை இருக்கின்றது. கொழும்பு இந்திய தமிழர்களிடம் வியாபாரத்திறமையும், நிர்வாக ஆற்றலும் இருக்கின்றன. மலையகத்தமிழர்களிடம் உடல் உழைப்பு இருக்கின்றது. இம் மூன்று தரப்பினரும் ஒற்றுமைப்பட்டால், இலங்கை வாழ் தமிழர்களை எவரும் இலகுவில் உதாசீனம் செய்து விட முடியாது

(முற்றும்)

# நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு நாம் இனவாதத்தை தோற்கடிக்கவேண்டும்

## அநுரகுமார கோரிக்கை



கொழும்பு, ஜூலை 14

இந்த நாட்டை கட்டியெழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் தேசிய தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தேசிய தலைவர் அனுரகுமார திசநாயக்க வுக்கும் அம்பாறை மாவட்ட கரையோர வர்த்தகர்களுக்கும் இடையிலான கலந்துரையாடல் நேற்று மாலை காரைதீவில் இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட செயற்பாட்டாளரும் கல்முனை தொகுதி அமைப்பாளருமான ஏ. ஆதம்பாவா தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில், அம்பாறை மாவட்டத்தின் பெருமளவிலான தமிழ் பேசும் கரையோர வர்த்தக பிரமுகர்கள் கலந்து கொண்டனர். அத்துடன் பல வர்த்தகர்கள் இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க முன்னிலையில் முன்னிலைப்படுத்தி அறிமுகப்படுத்தப் பட்டனர்.

இங்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திசநாயக்க உரையாற்றிய போது-

எங்களது நாடானது பொருளாதாரத்தில் ஒதுக்கப்பட்ட வீழ்ச்சி அடைந்த நாடாக இருக்கின்றது. வாங்கிய கடனை செலுத்த முடியாத ஒரு நாடாக நாங்கள் இருக்கிறோம். தொழில் வல்லுனர்களுக்கு இலங்கையை விட்டு வெளியேற வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது.

இந்த நாட்டை கட்டி எழுப்ப வேண்டும் என்றால் நாங்கள் இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்க வேண்டும். ஆட்சியாளர்கள் ஏன் இன வாதத்தை கொண்டு வருகிறார்கள் ? எங்கள் எல்லோருக்கும் தெரியும் அவர்களுக்கு பொது மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காண முடியாதவிடத்து, பிள்ளைகளுக்கு தொழில் ஒன்றை வழங்க முடியாத விடத்து, மீனவ சமூகத்தினுடைய பிரச்சினையை தீர்க்க முடியாவிட்டால் அவர்கள் இனவாதத்தை கட்டவிழ்த்து விடுவார்கள். இந்த இதனவாதத்தின் ஊடாக சிங்கள மக்களை மூளைச்சலவை செய்து சிங்கள மக்களுக்காக ஒரு அரசாங்கத்தை உருவாக்குவோம் என்று சொல்வார்கள்.

ஆகையினால் இந்த நாட்டை சிறப்பாக கட்டி எழுப்புவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும். தேசிய ஒற்றுமையை நாங்கள் உருவாக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை யாருக்கு உருவாக்கலாம். சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களுக்கு ஒற்றுமை தேவை இல்லையா ?

தேசிய ஒற்றுமை தேவை இல்லையா ? அதற்காகவே நாங்கள் முயற்சி செய்கிறோம். அது தேவை இல்லை என்றால் வேறு கட்சிகளை நீங்கள் தேர்ந்தெடுங்கள். வர்த்தகத்துடன் தொடர்புடைய நிறைய பேர் இங்கே இருக்கின்றீர்கள். நீங்கள் அனைவரும் மக்களை சந்திக்கிறீர்கள். கலந்துரையாடு கின்றீர்கள். நீங்கள் சொல்வதை மக்கள் கேட்பார்கள். இன்னும் இரண்டரை மாதங்கள் தான் இருக்கின்றது. எல்லோரும் சேர்ந்து கதைப்போம். தெற்கைப் போன்று கிழக்கு மாகாணத்திலும் மாற்றம் உருவாக வேண்டும் - என்றார்.

(அ)

# ஹரீனை சந்தித்த ஐ.தே.கவின் யாழ்.மாவட்ட உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ் மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களுக்கும் சுற்றுலாத்துறை இளைஞர் விவகார அமைச்சர் ஹரீன் பெர்னான்டோவுக்கும் இடையிலான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ்.மாவட்ட ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தில் இடம்பெற்றது.

பலாலி வீதியில் உள்ள ஐக்கிய தேசிய கட்சி அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது .

யாழ்.மாவட்ட ஐக்கிய தேசிய கட்சியின் அமைப்பாளரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் யாழ் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆதரவாளர்கள், தொகுதி அமைப்பாளர்கள், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்துகொண்டு தற்போதுள்ள அரசியல் நிலவரங்கள் தொடர்பில் ஆராய்ந்ததோடு எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் யாழ் மாவட்டம் தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்பட வுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

(அ)

## யாழில் தொடரும் வன்முறைகள்

# வாள்வெட்டு தாக்குதலில் சாரதி, பயணி படுகாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ்ப்பாணத்தில் பேருந்தில் பயணித்துக் கொண்டிருந்த இருவர், சாரதி மற்றும் பயணி ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை பயணித்த பேருந்தில், கைதடி பகுதியில் இரு இளைஞர்கள் ஏறியுள்ளனர்.

பின்னர், இந்த இளைஞர்கள் இருவரும் அரியாலை பகுதியில் பேருந்தில் இருந்து இறங்கி நடத்துநருடன் முரண்பட்டுள்ளனர்.

இதன்போது, சாரதியும், பேருந்தில் பயணித்த பயணி ஒருவரும், அவர்களைச் சமரசப்படுத்த முயன்றுள்ளனர்.

இதன்போது, இந்த இரு இளைஞர்களும், திடீரென தாம் மறைத்து வைத்திருந்த வாளினை எடுத்து , அங்கிருந்தவர்கள் மீது தாக்குதலை மேற்கொண்டு விட்டு அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

தாக்குதலில் சாரதி மற்றும் பயணி ஆகியோர் காயமடைந்த நிலையில், யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.


இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிந்த, ரணில் மற்றும் மைத்திரி இனியாவது ஓய்வுபெற வேண்டும்

## ஐக்கிய நூற்றாண்டு முன்னணி கோரிக்கை



**கொழும்பு, ஜூலை 14**
**பாராளுமன்றத்தில் 25 ஆண்டுகளுக்கு மேல் பதவி வகித்தவர்கள் நாட்டுக்காக எதனை செய்துள்ளார்கள். எனவே ரணில் விக்கிரமசிங்க, மகிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன ஆகியோர் இனியாவது ஓய்வுபெற வேண்டும் என்று ஐக்கிய நூற்றாண்டு முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.**

இவர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக தொடர்ந்து பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்களா? அல்லது தங்களின் குடும்ப அபிவிருத்திக்காக அங்கம் வகிக்கிறார்களா? இவர்களால் இனி ஏதும் செய்ய முடியாது என்பது உறுதிப்படுத்தப்பட்டு விட்டது. ஆகவே, இவர்கள் கௌரவமான முறையில் ஓய்வுபெற்று இளைஞர்களுக்கு வழிவிட வேண்டும் என்று ஐக்கிய நூற்றாண்டு முன்னணியின் தலைவர் பிரசாத் தி விஸர் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள ஐக்கிய நூற்றாண்டு முன்னணி காரியாலத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

நாடு வங்குரோத்து நிலையடைவதற்கு 225 உறுப்பினர்களும் பொறுப்புக்கூற வேண்டும். ஒரு சில அரசியல்வாதிகள் பாராளுமன்றத்தை அரச சேவையாக நினைத்துக்கொள்கிறார்கள். இறக்கும் வரை பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருந்து கொண்டு செயல்படுகிறார்கள். இவர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கிறார்களா?அல்லது தமது குடும்ப அபிவிருத்திக்காக அங்கம் வகிக்கிறார்களா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு 75 வயது. இவர் 42 ஆண்டுகள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். இவர் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்த காலத்தில் தான் சிவில் யுத்தம் நடைபெற்றது. நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது. 42 வருடங்கள் ஒன்றும் செய்யவில்லை. இனியும் இவரால் எதனை சாதிக்க முடியும்?

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு 78 வயது. இவர் 39 வருடங்கள் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தியுள்ளார். நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக பதவி வகித்ததன் பின்னர் மீண்டும் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகிக்கும் முறைமையை இவர் தோற்றுவித்தார். உலகில் வேறெந்த நாடுகளிலும் இவ்வாறான நிலை கிடையாது. நாட்டின் உயரிய பதவியான ஜனாதிபதி பதவியை வகித்த ஒருவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதை காணக்கூடியதாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு 72 வயது. இவர் 39 ஆண்டுகள் பாராளுமன்ற உறுப்பினராக பதவி வகித்துள்ளார். நல்லாட்சி அரசாங்கத்தில் இவர் செயல்பட்ட விதம் 2019ஆம் ஆண்டு அரசியல் மாற்றம் ஏற்படுவதற்கு மூல காரணியாக அமைந்தது. ஜனாதிபதி பதவியில் இருந்துகொண்டு நாட்டுக்கு செய்யாத சேவையையா? இவர் பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டு செய்யப் போகிறார்?

பாராளுமன்றத்தில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளில் பெரும்பாலான உறுப்பினர்கள் 30 வருடங்களுக்கு மேல் பாராளுமன்ற உறுப்பினர்களாக பதவி வகிக்கிறார்கள். இவர்களால் இனி ஏதும் செய்ய முடியாது என்பது உறுதியாகியுள்ளது.

ஆகவே இவர்கள் நாட்டுக்காகவேனும் கௌரவமான முறையில் அரசியலில் இருந்து ஓய்வுபெற வேண்டும். அரசியல் கட்சிகள் இவர்களுக்கு வேட்பு மனுக்கள் வழங்கக் கூடாது. இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும்- என்றார். (எ)



# அரசால் பணம் அச்சடிக்க முடியாது பொறுப்புடன் செயல்பட வேண்டும்

## அரச ஊழியர்களுக்கு பந்துல அறிவுறுத்தல்

திருகோணமலை, ஜூலை 14

2042 ஆம் ஆண்டு வரை பணம் அச்சடிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து, அரச ஊழியர்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும்- இவ்வாறு போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் பந்துல குணவர்த்தன அறிவுறுத்தியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கான மக்கள் சந்திப்பு செயல் திட்டத்தின் கீழ் விசேட கூட்டம் வெள்ளிக்கிழமை திருகோணமலை மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

பொருளாதார நெருக்கடியிலிருந்து மூச்செடுக்க முடியாத நாட்டைப் படிப்படியாக மீட்டெடுப்பதற்கு, செலவை குறைத்து வருமானத்தை அதிகரிப்பது தொடர்பாகவே அரசாங்கம் சிந்தித்துக் கொண்டிருக்கின்றது.

இந்த நிலையில் 2042 ஆம் ஆண்டு வரை பணத்தை அச்சடிக்க முடியாது என்ற உண்மையை உணர்ந்து, அரச ஊழியர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

2019ஆம் ஆண்டுக்கு முன்னர், அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்காக, அவ்வப்போது பணம் அச்சடிக்கப்பட்டது. ஆனால், இன்று அவ்வாறு செய்ய முடியாது. கடனிலிருந்து நாட்டை முதலில் மீட்க வேண்டும். இதற்காக வருமானத்தை அதிகரித்து அரச செலவுகளை குறைக்க வேண்டும். மக்கள் உயிர் வாழ்வதற்கான, அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அதிகமான நிதியைச் செலவு செய்து வருகின்றோம்.

இறக்குமதி செய்யப்படுகின்ற பொருட்களுக்காக ஏற்படுகின்ற செலவை ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களில் இருந்து கிடைக்கும் வருமானத்தைக் கொண்டு ஈடுசெய்ய முடியாதுள்ளது. இதுவே நாட்டின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணமாகும்- என்றார்.

இந்தக் கூட்டத்தில் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, மொறவெவ விமானப்படை முகாம் வீதி, சிறீ கருமாரி அம்மன் வீதி என்பன திறக்கப்பட்டன. அத்தோடு அம்மன் ஆலயத்தில் அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் வழிபாட்டியில் ஈடுபட்டனர். (எ)

# கதிர்காம உற்சவத்தில் திருட்டுகள் அதிகரிப்பு

கதிர்காமம், ஜூலை 14

கதிர்காமக் கந்தன் ஆலய உற்சவத்துக்கு வருகை தரும் பக்தர்களின் சொத்துக்களைத் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கதிர்காம உற்சவம் நடைபெறும் இடங்களில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மோட்டார் சைக்கிள்களிலிருந்து எரிபொருள் திருடப்படுவதால் அங்கு வருகை தரும் மக்கள் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த நிலையில், ஒட்டோக்களின் மின்கலங்கள் உட்பட உதிரிப்பாகங்களைத் திருடிச் செல்லும் சம்பவங்களும் பல பதிவாகியுள்ளன.

மேலும், உற்சவத்துக்கு வருகை தரும் மக்களின் கையடக்கத் தொலைபேசிகள் திருடப்படுவதுடன் பல்கலைக்கழக மாணவியொருவரின் இரண்டு இலட்சம் ரூபாய் பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்று திருடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விசேட நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் பொலிஸாரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ)

# கெஹலியவுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜூலை 14

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உள்ளிட்ட 7 சந்தேகநபர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.


சந்தேகநபர்களை கொழும்பு மாளிகாகந்த நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் முற்படுத்திய போதே இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# முஸ்லிம் திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்க கோரிக்கை

கொழும்பு, ஜூலை 14

சடலங்களை (ஜனாஸாக்களை) தாமதமின்றி கையளிக்கும் வகையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பிரதேசங்களுக்கு மேலதிக திடீர் மரண விசாரணை அதிகாரிகளை நியமிக்குமாறு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உயிரிழக்கும் முஸ்லிம்களுக்கான இறுதிச் சடங்கு நடவடிக்கைகளை மத வழிமுறைக்கு அமைய, 24 மணித்தியாலங்களுக்குள் நிறைவேற்றுவதற்கு வசதியாக இந்த நியமனங்களை மேற்கொள்ளுமாறு அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

அதில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

முஸ்லிம் மக்களின் (ஜனாஸாக்கள்) இறுதிச் சடங்குகள் ஏனைய மத சடங்குகளை போலன்றி 24 மணித்தியாலங்களுக்குள் நிறைவேற்றப்பட வேண்டும். எனினும், பல்வேறு காரணங்களினால் இதனை உரிய காலத்துக்குள் நிறைவேற்றுவதில் பல சிக்கல்களை இந்த மக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது நல்லாட்சியின் நெறிமுறை பொறுப்புகளுக்கும் முரணானதாகும்.

எனவே, முஸ்லிம் மக்களுக்கு அவர்களின் மரபு ரீதியான கடமைகளை எளிதாக்கும் வகையில் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு முஸ்லிம் சமூகத்திலிருந்து மரண விசாரணை அதிகாரிகள் பலரை நியமிக்க பரிந்துரைப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சரத் பொன்சேகாவை முற்றாக நீக்க முடிவு

## ஐக்கிய மக்கள் சக்தி அதிரடி

கொழும்பு, ஜூலை 14

**ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற குழுக் கூட்டம் உட்பட கட்சியின் சகல நடவடிக்கைகளிலிருந்தும் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை நீக்க அந்தக் கட்சி தீர்மானித்துள்ளது.**

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகாவின் அண்மைக் கால நடவடிக்கைகள், அவர் எடுக்கும் அரசியல் தீர்மானங்கள் குறித்து ஆராய்ந்த பின்னரே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவருக்கு ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய மக்கள் கூட்டணி என்பனவற்றின் ஊடாக தேர்தலில் போட்டியிட வேட்பு மனு வழங்குவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)



# இசை நிகழ்ச்சியில் மோதல் ஒருவர் பலி! ஐவர் படுகாயம்


கொழும்பு, ஜூலை 14

வீரகெட்டிய மொரயாய பிரதேசத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியின் போது இரு தரப்பினருக்கு இடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த மோதலில் வீரகெட்டிய மொரயாய பிரதேசத்தைச் சேர்ந்த 30 வயதுடையவரே உயிரிழந்ததுடன் மேலும் ஐவர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்கள் தங்காலை மற்றும் எம்பிலிப்பிட்டிய மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களது நிலைமை மோசமான நிலையில் இல்லையென மருத்துவமனை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (எ)



# மலேசிய துணை பிரதமரை சந்தித்தார் கிழக்கு ஆளுநர்

மாலே, ஜூலை 14

மலேசியாவுக்கு சென்றுள்ள கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், அந்த நாட்டு துணைப் பிரதமர் டத்தோசிறீ அகமட் ஜாஹிட் பின் ஹமிடியைச் சந்தித்தார்.

இதன்போது, இரு நாட்டு உறவை வலுப்படுத்துவது குறித்த கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் டத்தோசிறீ சரவணன் மற்றும் மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஆகியோர் உடனிருந்தனர்.

### பூஸா சிறையில் சோதனை

# கண்காணிப்பாளருக்கு கொலை அச்சுறுத்தல்!

கண்டி, ஜூலை 14

பூஸா சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின் போது கைதிகளிடமிருந்து பல கையடக்கத் தொலைபேசிகளை கைப்பற்றிய சிறைச்சாலை கண்காணிப்பாளருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களாக பூஸா சிறைச்சாலையில் விசேட சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இதன்போது, சிறைச்சாலையினுள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல்வேறு பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த நிலையில், சிறைச்சாலை கண்காணிப்பாளரின் தந்தைக்கு டுபாயிலிருந்து தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்த மர்ம நபரொருவர் கொலை அச்சுறுத்தல் விடுத்துள்ளார்.

மேலும், கட்டுநாயக்கா பிரதேசத்தில் உள்ள குறித்த சிறைச்சாலை கண்காணிப்பாளரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் இரு இளைஞர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது, அந்த இளைஞர்களில் ஒருவர், தொலைபேசி மூலம் கொலை அச்சுறுத்தல் விடுத்தது டுபாயில் உள்ள "ஹீனடியன சங்க" என்பவர் என சிறைச்சாலை கண்காணிப்பாளரின் தந்தையிடம் கூறியுள்ளார்.

பின்னர், அந்த இளைஞர்கள் இருவரும் சிறைச்சாலை கண்காணிப்பாளரின் தந்தையிடம் "உங்களது மகனை அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். தேவையில்லாத விடயங்களில் ஈடுபட வேண்டாம் எனக் கூறுங்கள். இல்லையென்றால் உங்களது மகனை கொன்று விடுவோம்" எனக் கூறியுள்ளனர்.

இதனையடுத்து சிறைச்சாலை கண்காணிப்பாளர் இது தொடர்பில் சிறைச்சாலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது. (எ)

# ரணில் முட்டுக்கட்டை போட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே தீரும்

## அநுரகுமார எம். பி. திட்டவட்டம்

காரைதீவு, ஜூலை 14

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எந்த விதமான முட்டுக்கட்டை போட்டாலும் ஜனாதிபதித் தேர்தல் நிச்சயம் நடந்தே தீரும் என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸநாயக்க எம். பி. தெரிவித்தார்.

அம்பாறை, காரைதீவில் வர்த்தகர்களை வெள்ளிக்கிழமை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

எமது நாட்டு மக்கள் காலம் காலமாக தொடர்ந்து நாட்டையும் மக்களையும் அழித்து வருபவர்களுக்கே வாக்குகளை வழங்கி வந்திருக்கின்றார்கள். இதனால் தான் நாடு அனைத்து விதங்களிலும் கெட்டு குட்டிச்சுவராகி இருக்கிறது.

இனவாதிகளும் ஊழல்வாதிகளும் இந்த நாட்டை ஆண்டதால்தான் நாட்டில் இனவாதம் மேலோங்கி பொருளாதாரம் சீரழிந்து அனைத்து விதத்திலும் நாடு பின்னடைந்து காணப்படுகிறது.

இனவாதத்தை முதலீடாக பயன்படுத்தி ஆட்சி நடத்திய ராஜபக்ஷக்களால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. மத்திய வங்கி கொள்ளையில் ஈடுபட்ட ரணில் விக்கிரமசிங்கவால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது.

வீடமைப்பு அமைச்சின் பணத்தை வீணடித்த சஜித் பிரேமதாஸவால் நாட்டைக் கட்டியெழுப்ப முடியாது. ரணில் அரசாங்கத்திடம் இருந்து மதுபான விற்பனை நிலைய அனுமதிப் பத்திரம் பெற்ற எம். பிக்கள் சஜித்துடன் உள்ளனர். இதை சஜித் மறுப்பாரா?

ரணில் விக்கிரமசிங்க என்ன முடிச்சுகளை போட்டாலும் அடுத்த இரண்டரை மாதங்களுக்கு இடையில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தே தீரும்.

தேர்தலில் தேசிய மக்கள் சக்தி மகத்தான வெற்றியைப் பெற்று அதன் மூலமாக எமது நாட்டு மக்கள் விரும்புகின்ற மக்கள் ஆட்சி நிச்சயம் மலரும். எமது ஆட்சியில் இனவாதம் இருக்காது. பொருளாதார மாட்சி ஏற்படும். எமது மக்களுக்கு மீட்சி ஏற்படும்.

தென்னிலங்கை மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் ஒன்றித்து நிற்கின்றனர். அதே போன்று தேசிய மக்கள் சக்தி மூலமாக மக்கள் ஆட்சி உருவாக்கப்படுவதில் கிழக்கு மக்களும் பங்காளிகளாக இணைய வேண்டும்.

மாற்றத்துக்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம். இலங்கையர்களாக நாம் அனைவரும் வாழ்வோம். புதிய தேசத்தை கட்டியெழுப்புவோம்- என்றார். (எ)

# தாயத்து கட்டவந்த சிறுமியை கர்ப்பமாக்கிய பூசாரி கைது!

கொழும்பு, ஜூலை 14

14 வயதுச் சிறுமியை பாலியல் துஷ்பிரயோகம் செய்ததாக குற்றஞ்சாட்டப்படும் பூசாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக லுணுகலை பொலிஸார் தெரிவித்தனர்.

தனது மகளுக்கு அளவுக்கதிகமான கோபம் வருவதாகவும் வீட்டில் உள்ளவர்கள் சொல்வதை பிள்ளை கேட்பதில்லை எனவும் பல காரணங்களால் தெய்வ குற்றமாக இருக்கலாம் என எண்ணி பிள்ளைக்கு தாயத்து கட்டுவதற்காக பூசாரி ஒருவரை அணுகியுள்ளனர்.

இந்த நிலையில் வீட்டுக்கு வந்த பூசாரி, பிள்ளைக்கு தாயத்து கட்ட வேண்டுமென கூறி அனைவரையும் வீட்டை விட்டு வெளியே செல்லுமாறு கூறியுள்ளார்.

அதன்பின்னர், தனிமையில் இருந்த சிறுமியை பூசாரி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியதாக தெரியவந்துள்ளது.

பின்னர் சுகவீனமுற்ற சிறுமியை பதுளை மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சையளிக்க முற்பட்ட போது சிறுமி கர்ப்பமாக இருப்பது தெரியவந்துள்ளது.

இதன்பின்னர் லுணுகலை பொலிஸ் நிலையத்துக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய 30 வயதுடைய பூசாரி கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கூரிய ஆயுதத்தினால் தாக்கி தேங்காய் வியாபாரி கொலை

காலி, ஜூலை 14

காலியில் ரத்கம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரப்பனாதெனிய பகுதியில் நேற்று முன்தினம் இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பகுதியில் வசித்து வந்த 60 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

தேங்காய் வியாபாரியான இவர் வெளிநாட்டிலுள்ள தனது இளைய சகோதரியின் வீட்டுக்குச் சென்று தேங்காய் உரித்துக் கொண்டிருக்கும் போது கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

இந்தக் கொலைக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் சந்தேக நபர்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (எ)

# பொல்லால் தாக்கி ஒருவர் கொலை!

இரத்தினபுரி, ஜூலை 14

இரத்தினபுரியில் பொத்துப்பிட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ரம்புக்க பகுதியிலுள்ள வீடொன்றில் பொல்லால் தாக்கப்பட்டு ஒருவர் கொலை செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

ரம்புக்க பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

கொலை செய்யப்பட்டவருக்கும் அயல் வீட்டில் வசிக்கும் நபரொருவருக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக அயல் வீட்டில் வசிக்கும் நபர் மேலும் இரண்டு நபர்களுடன் இணைந்து இந்தத் தாக்குதலை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் 28 முதல் 35 வயதுக்குட்பட்ட அயல் வீட்டில் வசிக்கும் நபர் உட்பட மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
14.07.2024 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், ஆனி 30

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# எல்லாவற்றையும் நம்பும் தலைமுறை

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை தொடர்பான குற்றச்சாட்டுகள் பற்றிய விசாரணைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும். அந்தப் பொறுப்பு சுகாதார அமைச்சுக்குரியது. தவறுகள் இருப்பின் அதனை திருத்திக் கொள்ள வேண்டியதும் - அதேவேளை, பொய்கள் கலக்கப்பட்டிருப்பின் அதனை பொது வெளிக்கு கொண்டுவருவதும் சம்பந்தப்பட்ட அனைவரதும் பொறுப்புமாகும் - ஆனால், இந்த விடயத்தில் வைத்தியசாலை விவகாரத்திற்கு அப்பால், சமூக பொறுப்புடன் கவனிக்க வேண்டிய பிறிதொரு முக்கியமான விடயமுண்டு. இன்றைய காலத்தில் அது மிகவும் ஆபத்தானதொரு விடயமாக மாறிவருகின்றது. சமூக ஊடகங்களில் ஒருவர் குறிப்பிடும் விடயங்களை அப்படியே, ஆராயாமல் நம்பிவிடும் தலைமுறையொன்று உருவாகிவருவது மிகவும் ஆபத்தானது.

சமூக ஊடங்களை இன்று பலரும் தங்களது தேவைகளுக்கு பயன்படுத்தி வருகின்றனர். உலகின் மிகவும் ஆபத்தான சர்வதேச இஸ்லாமிய பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ். போன்ற அமைப்புக்கள் முகநூலை மிகவும் கச்சிதமாக பயன்படுத்தி வருகின்றன. முகநூல்கள் வழியாக மேற்கொள்ளப்படும் பிரசாரங்களை உண்மையென்று நம்பி, பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் அந்த அமைப்பில் இணைந்திருப்பதாக தீவிரவாத எதிர்ப்பு ஆய்வுகள் கூறுகின்றன. அதேபோன்று, மதசார்ப்பு குழுக்கள், சமூக விரோத அமைப்புக்கள் என அனைத்து தரப்புக்களுமே முகநூல்களை பயன்படுத்தி வருகின்றன. அதே வேளை, நல்ல கருத்துக்களை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதற்கும், அரசியல் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் முகநூல்கள் பயன்படுத்தப்படுகின்றன. அரபு வசந்தத்தில் சர்வாதிகாரிகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டியதில் சமூக ஊடங்கள் முக்கியமாக பயன்படுத்தப்பட்டிருக்கின்றன.

தமிழ் சூழலிலும் பலரும் முகநூல்களின் வழியாக தங்களின் கருத்துக்களை வெளிப்படுத்திவருகின்றனர் ஆனால், தமிழ்ச் சூழலில் முகநூல்கள் அதிகம் எதிர்மறையாக பயன்படுத்தப்படுவதாகவே தெரிகின்றது. முகநூல்கள் மற்றவர்களை தாக்குவதற்கும் பொய்களை பரப்புவதற்குமே அதிகம் பயன்படுவதாக தெரிகின்றது. சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை விடயத்தை தொடர்ந்து வைத்தியர்கள் என்றாலே மோசமானவர்கள் என்பது போன்ற கருத்துக்கள் முகநூல்களின் வழியாகவே வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையை முன்வைத்து வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள், தற்போது ஒட்டுமொத்த வடக்கு மாகாண வைத்தியர்கள் மீதே சந்தேகப்படுவதான தோற்றப்பாட்டை ஏற்படுத்தியிருக்கின்றது. வைத்தியர்களில் சிலர் தவறுகளை செய்யலாம் - அதற்கு வாய்ப்புகள் உண்டு. தவறுகள் செய்பவர்கள் வைத்திய துறையில் மட்டுமல்ல, அனைத்து துறைகளிலும் இருக்கின்றனர். அதேபோன்று, வைத்தியத் துறையை பணம் சம்பாதிக்கும் துறையாக நோக்குபவர்களும் இருக்கின்றனர். இவைகள் உண்மையாக இருப்பினும் கூட, வைத்தியதுறையை ஒரு சேவையாக செய்யும் ஆயிரக்கணக்கான நல்ல வைத்தியர்களும் இருக்கின்றனர். பலர் தங்களின் சுகபோக வாழ்க்கைக்காக வெளிநாடுகளை நோக்கிச் செல்லும்போது, இப்போதும் மண்ணிலிருந்து பணிபுரிபவர்களை மதிக்கவேண்டியது சமூகத்தின் கடமை.

அரசியல் தொடர்பாக முகநூல்களில் பதிவிடப்படும் அனைத்தையும் நம்பும் தலைமுறையொன்று, இப்போது சமூக மட்டத்திலும் உருவாகி வருகின்றது. இளைய தலைமுறையொன்று. எவ்வித விசாரணையுமின்றி, அனைத்தையும் நம்பும் நிலைக்கு செல்கின்றது. முகநூல்களில் பொய்களை பரப்பும் போக்கொன்று, முதலில் அரசியல் விடயங்களில்தான் ஆரம்பித்தது. இது தற்போது, ஒரு சமூக நோயாக மாறிவருகின்றது. இது மிகவும் ஆபத்தானது.

# உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கல்



யாழ்ப்பாணம்,ஜூலை 14

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் தற்காலிக ஊழியர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கும் நிகழ்வு வெள்ளிக் கிழமை யாழ்ப்பாணம் பொது நூலக கேட்போர் கூடத் தில் நடைபெற்றது.

பிரதமர் தினேஷ் குணவர்த்தனவின் தலைமை யில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 165 பேருக்கான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட் .

இதன்போது உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர்,

மிக நீண்டகாலமாக உள்ளூராட்சி நிறுவனங்களில் தற்காலிக, அமைய அடிப்படையில் பலர் பணியாற்றி வருகின்றனர். இவர்களுக்கான நிரந்தர நியமனங்களை பெற்றுக் கொடுக்க பெரும் பிரயத் தனங்கள் முன்னெடுக்கப் பட்டன. எங்களின் கோரிக்கையை ஏற்று, ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய, பிரதமர் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்தார். இவர்கள் இருவருக்கும் நன்றிகளை கூறிக்கொள் கின்றேன்.

165 பேருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்க அனுமதி கிடைத்துள்ளது. நீண்ட கால ஏக்கத்துக்கு ஒரு தீர்வு கிடைத்துள்ளது- என்றார்.

பிரதமர் தெரிவிக்கையில்,

தற்காலிக மற்றும் அமைய அடிப்படையில் பணியாற்றி வந்த ஊழியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கும் செயல்பாட்டுக்கு வடமாகாண ஆளு நர் பி. எஸ். எம். சார்ள்ஸ் முதன் முதலில் தனது ஆதரவை தெரிவித்தார்.

ஆளுநரின் தொடர்ச்சியான முயற்சியின் பலனாகவே 165 பேருக்கான நிரந்தர நியமனங்கள் கிடைத்துள்ளன. நிரந்தர நியமனங்களைப் பெற்றுக்கொள்ளும் ஊழி யர்கள் தங்களின் கடமைகளை உரியவாறு முன்னெடுக்கவேண்டும் - என்றார். (எ)

# வெளிநாட்டவர்களுக்கான வீசா விநியோகம் சிக்கலில்

## ஹர்ஷ டி சில்வா கூறுகிறார்



கொழும்பு, ஜூலை 14

வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகிக்கும் பணியை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்கியுள்ள விவகாரத்தில் பல சிக்கல்கள் காணப்படுவதால், விலைமனுக்கோரல் விடயத்தினை முழுமையாக தடயவியல் கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என அரச நிதி தொடர்பான குழு பரிந்துரைத்துள்ளதாக அக்குழுவின் தலைவர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகிக்கும் சேவையை வி.எப்.எஸ் நிறுவனத்துக்கு வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தாலும், ஆனால் அந்த சேவை வி.எப்.எஸ். நிறுவனத்துக்கு வழங்கப்படவில்லை. மாறாக ஜி.பி.எஸ் என்று கூட்டு நிறுவனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் வெளிநாட்டவர்களுக்கு விசா விநியோகிக்கும் பணியை வெளிநாட்டு கூட்டு நிறுவனத்துக்கு பொறுப்பாக்கியமை தொடர்பில் சமூக கட்டமைப்பில் பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்திய தாகவும், இவ்விடயம் குறித்து அரச நிதி தொடர்பான குழுவில் விசாரணைகளை மேற்கொண்ட போது பல சிக்கல்களை எதிர்கொண்டதாகவும் ஹர்ஷ டி சில்வா சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் விசா கட்டணம் குறித்து பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுவதாகவும், ஒரு இடத்தில் 18.5 டொலர் என்றும் பிறிதொரு இடத்தில் 7.2 டொலர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர்,

இந்த செயற்திட்டம் 200 மில்லியன் டொலர் முதலீடு என்று அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாக ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்தாலும், முன்னெடுத்த விசாரணைகளில் 200 மில்லியன் டொலர் அல்ல 200 மில்லியன் ரூபா என்று கூட குறிப்பிடப்படவில்லை எனவும் தெரிவித்தார். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசியம் ஆரோக்கியமான உணவுத் தேர்வு!

ஜவி.நாகராஜன்



மக்கள்தொகை பெருக்கம், தொற்றுநோய், போர் ஆகியவற்றால் உலக அளவில் பட்டினியால் பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கை 82.8 கோடியாக உயர்ந்துள்ளது என்கிறது உலக சுகாதார நிறுவனம்.

உலக மக்கள்தொகையில் 29.3 வீதம் என்ற அளவில் கடுமையான உணவுப் பாதுகாப்பின்றி இருந்தனர். பசியால் பாதிக்கப்பட்டவர்களின் விகிதம் 2021-இல் உலக மக்கள் தொகையில் 9.8 சதவீதமாக உயர்ந்தது. இது 2020-இல் 9.3 சதவீதமாக இருந்தது. ஐந்து வயதுக்கு உள்பட்ட நாலரை கோடி குழந்தைகள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஊட்டச்சத்துக் குறைபாடானது, குழந்தைகளின் இறப்பு அபாயத்தை 12 மடங்கு அதிகரித்திருக்கிறது. 5 வயதுக்கு உட்பட்ட 14.9 கோடி குழத்தைகள் தங்கள் உணவில் அத்தியாவசிய ஊட்டச் சத்து இல்லாததால் வளர்ச்சி குன்றியிருந்தனர் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

உணவு மூலம் பரவும் நோய்களால் ஒவ்வொரு ஆண்டும் 4 லட்சத்து 20ஆயிரம் இறப்புகள் ஏற்படுவதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. ஜெர்மனியைச் சேர்ந்த ஓர் ஆய்வு நிறுவனம், பசியின் தாக்கத்தால் ஒவ்வொரு 13 வினாடிக்கும் ஒரு குழந்தை இறக்கிறது என்கிறது.

பழங்கள், காய்கறிகள், தானியங்களை எடுத்துக் கொள்வது குறைந்து, பதப்படுத்தப்பட்ட இறைச்சி, இனிப்பு சுவை நிறைந்த குளிர்பானங்களை அதிக அளவில் எடுத்துக் கொள்ளும் நிலை இந்தியாவில் அதிகரித்து வருகிறது.

இன்று உலகின் 5-ஆவது மிகப் பெரிய பொருளாதார சக்தியாக இந்தியா உயர்ந்துள்ளபோதிலும், இந்தியர்களில் 71 வீதம் பேருக்கு போதிய ஊட்டச்சத்து உணவு கிடைப்பதில்லை என சர்வதேச ஊட்டச்சத்து அறிக்கை தெரிவிக்கின்றது. இந்த விஷயத்தில், சர்வதேச சராசரி 42 சதவீதமாக உள்ளது.

உலகளாவிய பசி குறியீடு 2022 தரவரிசையில், 121 நாடுகளில் இந்தியா 107-ஆவது இடத்தில் உள்ளது. உலக மக்கள் தொகைக்குப் போதுமான உணவு உற்பத்தி செய்யப்பட்டாலும், உலகில் 9 பேரில் ஒருவர் பட்டினியால் பாதிக்கப்படுகின்றனர். உலக அளவில் உற்பத்தி செய்யப்படும் உணவில் மூன்றில் ஒரு பங்கு வீணாகிறது என உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு சொல்கிறது. உணவு வீணாக்குதல் குறித்த அறிக்கை, ஆண்டொன்றுக்கு சராசரியாக இந்தியர் ஒருவர் 50 கிலோ உணவை வீணாக்குகிறார் என்கிறது.

இன்று கிராமம், நகரம் என்கிற பேதம் இல்லாமல் துரித உணவு கலாசாரம் வந்துவிட்டது. தூக்கலான உப்புச் சுவையுடன் மசாலா கலந்த அதன் சுவைதான் எல்லோரையும் ஈர்க்கிறது. இதில் அடங்கியுள்ள அதிக கொழுப்புகள் மனதை ஒரு மயக்கத்தில் தள்ளுகிறது. ஆனால் அதன் பின் விளைவுகள் குறித்து நாம் கவலை கொள்வதில்லை. தொடர்ந்து துரித உணவு வகைகளை சாப்பிடுபவர்களுக்குப் பல்வேறு நோய்கள் வருவதற்கான ஆபத்துகள் அதிகமாக இருக்கிறது என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர்.

பீட்சா, பேர்கர், ஃபிரைட் ரைஸ் ஆகியவை குழந்தைகள், இளைஞர்களுக்குப் பிடித்த உணவுகளாக இருக்கின்றன. இவை அதிகம் கலோரிகள், ஆரோக்கியமற்ற கொழுப்புகள் கொண்டவை. ஊட்டச்சத்து உள்ளடக்கம் குறைவாக இருப்பதால் உடல் ஆரோக்கியத்தை பாதிப்பதுடன், நோய் எதிர்ப்பு சக்தியையும் பலவீனப்படுத்துகின்றன. இதனால் காலப்போக்கில் நீரிழிவு நோய் பாதிப்பு அதிகரிக்கும் என்று சிறப்பு மருத்துவர்கள் கூறுகின்றனர்.

துரித உணவுகளில் உப்பு அதிகமாக இருப்பதால் ரத்த அழுத்தம் ஏற்படுகிறது. மேலும் மனச்சோர்வு, தலைவலி, உடல் சோர்வு, உடல் எடை அதிகரிப்பு போன்ற பாதிப்புகள் ஏற்படுகின்றன. வயிற்று வலி, மூட்டு வலி, நாக்கு வீங்குதல் போன்ற பாதிப்புடன் நரம்பு செல்களும் பாதிக்கும். ஞாபக சக்தி குறையும். கவனச் சிதறல் ஏற்படும் இந்த உணவுகளைத் தொடர்ந்து சாப்பிட்டால் உடலின் ஏனைய உறுப்புகளுக்கும் பாதிப்பு ஏற்படும். நெஞ்செரிச்சல், அதிக அமில சுரப்பு ஏற்படவும் துரித உணவுகளே காரணம்.

குழந்தைகளுக்கு இரைப்பை அழற்சி, ஊட்டச்சத்துக் குறைபாடு, உடல் பருமன் போன்றவை ஏற்படலாம். படிப்பு, விளையாட்டில் ஆர்வம் குறையும். தாழ்வு மனப்பான்மை ஏற்படும். இதயம் தொடர்பான நோய்களும் வரலாம். இந்த துரித உணவுகளை போல பாக்கெட் உணவுகளும் ஆபத்தானவை. இதை அதிகம் உண்ணும் போது உடலில் நச்சுக்கள் அதிகமாகி அஜீரண கோளாறு, புற்றுநோய், தோல் வியாதி போன்ற நோய்கள் ஏற்படலாம் என்று மருத்துவ ஆய்வுகள் கூறுகின்றன.

உணவை வீணாக்குவதைத் தவிருங்கள். தேவையான உணவுப் பொருட்களை பட்டியலிட்டு வாங்குங்கள். குழந்தைகளுக்கு ஆரோக்கியமான உணவை தர வேண்டும். அது சுவை மிகுந்ததாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சத்தானதாக இருக்க வேண்டும். சமச்சீர் உணவை உண்பதன் முக்கியத்துவம் பற்றிச் சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு சொல்லித் தரவேண்டும். ஐ.நா. சபை 2030-ஆம் ஆண்டுக்குள் பசிப் பிணியை முடிவுக்குக் கொண்டுவர உலகளாவிய நோக்கத்தை அமைத்துள்ளது. அதை நோக்கி நமது பயணம் தொடரட்டும். ●

## இந்தவார ராசிபலன் 14.07.2024 - 20.07.2024

ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம் - ஆனி 30

நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : அஷ்டமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் ஏற்படும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தனவரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். தொழிலில் எதிர்பார்த்தபடி இலாபங்கள் பெறுவதற்கான வழிமுறைகளை கையாண்டு வெற்றி அடைவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள். அடிக்கடி ஏற்படும் பயணங்கள் தவிர்க்க முடியாததாகும். சிலரின் உடல் நலிவுறும். இதைக்கூட கவனிக்காமல் இன்புற நினைப்பார்கள். செலவுகள் அதிகரிப்பதால் பர்ஸில் உள்ள பணமும் கொஞ்சம் கொஞ்சமாகக் குறையும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

மிருகசீரிஷம் - 3 , 4 பாதங்கள். -இந்த வாரம் காய் கனிந்து பழமாவது போன்ற இனிய பயணங்கள் ஆதாயம் தரும். உங்கள் திறமையின் காரணமாக பொருளாதார சிக்கல்கள் சீராக்கப்படும். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமையே, உயர்வு ஏற்படும். முழு மனதுடன் உங்கள் வாடிக்கையாளர்கள் உங்களுக்கும், உங்கள் நிறுவனத்துக்கும் சிறப்பான ஆதரவு நல்குவார்கள். தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடபுடலாக நடக்கும். தாமதமின்றி கிடைக்கும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் சினிமா, டிராமா, மால் என இளைஞர்களின் கனவு மையங்களில் பொழுது இனிமையாக கழியும்.பணிபுரியும் பெண்களுக்குத் திருமண காலம் கூடிவரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. ஆதாயம் காண்பர்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் நேர்மையும் கடின உழைப்பும் மட்டும் வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தை அளிக்கும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். கௌரவத்தையும் அடைவீர்கள்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். நல்ல குரு வாய்க்கப்பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும், பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். போதுமான ஊதியம் இருக்காது.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் நம்பிக்கைகளும், விருப்பங்களும் மனம்போல் நிறைவேறும். நலம் விரும்பிகள் மற்றும் நண்பர்கள் ஆலோசனைகள் ஆதாயம் தரும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக முடிவடையும். அனைத்திலும் வெற்றி மேல் வெற்றி கிடைக்கும். சுபகாரியங்களுக்கு வீடே விழாக்கோலம் பூணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் உங்களுக்கு திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பார்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம் புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாக இருக்கும். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம், வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும் ஆகியவற்றால் வரும் இன்பம் நிலைத்திருக்கும். பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புகளில் இருக்கும் பணத்தில் கை வைக்கவேண்டிய நிலை ஏற்படும். பழைய பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகள் நல்ல வருமானத்தை அடைவார்கள். முயற்சிகளில் வெற்றி ஏற்பட்டுத் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்னைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். அனுகூலமான பலன்கள் அடைவர்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும்படியான அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். முன்னேற்றம் ஏற்படும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்கள் தொழில் விஷயமாகத் தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன்கள் உடனடியாக கிடைக்கும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. வியாபாரிகள் தங்கள் வாககால் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்குவர். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டு. உழைப்பு அதிகமாகி அதற்கேற்ற ஆதாயம் இருக்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தல் படும்பாடு



**♦ வீரகத்தி தனபாலசிங்கம்**

**ரணில் விக்கிரமசிங்க இன்னமும் வெளிப்படையாக தான் தேர்தலில் போட்டியிடப்போவதை அறிவிக்கவில்லை. அதற்கு அவர் தரப்பில் காரணங்கள் இருக்கலாம். அது வேறு விடயம். வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்று கண்டால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தொடர்ச்சியாக மூன்று தடவைகள் தவிர்த்த அவர் மீண்டும் அவ்வாறு செய்துவிடக்கூடும் என்ற சந்தேகம் அவரது ஆதரவாளர்களுக்கு இருக்கிறது போலும்.**

மக்கள் கிளர்ச்சிக்கு மத்தியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நாட்டைவிட்டு வெளியேறி வெளிநாட்டில் இருந்தவாறு பதவியைத் துறந்து நேற்றைய தினத்துடன் சரியாக இரு வருடங்கள் கடந்துவிட்டன.

அவரின் எஞ்சிய பதவிக்காலத்துக்கு பாராளுமன்றத்தினால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதவியேற்று அடுத்த ஞாயிற்றுக்கிழமையுடன் சரியாக இரு வருடங்கள் நிறைவுபெறுகின்றன.

இந்த இரு வருடங்களிலும் எம்மால் காணக்கூடியதாக இருந்த அரசியல் நிகழ்வுப் போக்குகள் இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றும் கண்டிராத மாபெரும் மக்கள் கிளர்ச்சியின் மூலமாக விடுக்கப்பட்ட 'செய்தியில்' இருந்து எந்த பாடத்தையும் படிக்காமல் அரசியல் வர்க்கம் அதன் பழைய பாதைக்கு விரைவாகவே திரும்பியது என்பதை தெளிவாக வெளிக்காட்டி நிற்கின்றன.

'முறைமை மாற்றம்' (System Change) என்பதே மக்கள் கிளர்ச்சியின் பிரதான முழக்கமாக இருந்தது. அது தற்போது சகல அரசியல்வாதிகளும் தங்களது வசதிக்கேற்ற முறையில் பேசுகின்ற அளவுக்கு அதன் உண்மையான அர்த்தத்தை இழந்துவிட்டது.

பொருளாதார நெருக்கடிக்கு ஊழலும் முறைகேடுகளும் எந்தளவுக்கு முக்கிய காரணமாக இருந்தனவோ அதேயளவுக்கு அரசியல் மற்றும் சமூகச் சீரழிவுக்கு எதேச்சாதிகாரமும் அதிகார துஷ்பிரயோகமும் காரணமாக இருந்திருக்கின்றன.

இந்த இரு கெடுதிகளையும் ஒழிக்க வேண்டுமானால் முதலில் செய்யவேண்டியவற்றில் மிகவும் முக்கியமானது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதாகும். ஆனால், அதைப்பற்றி அரசியல் வர்க்கத்துக்கு தற்போது அக்கறை கிடையாது.

ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பை உரக்கப்பேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கூட அடுத்த ஜனாதிபதியாக தெரிவாவதில் தான் குறியாக இருப்பதையே காணக்கூடியதாக இருக்கிறது. மக்கள் கிளர்ச்சிக்கு பிறகு வரப்போகும் முதல் தேசிய தேர்தலில் ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு தொடர்பில் பிரதான கட்சிகளிடம் இருந்து எதையும் எதிர்பார்ப்பதற்கில்லை என்றே தோன்றுகிறது.

அரசியலமைப்பின் பிரகாரம் எதிர்வரும் செப்டெம்பர் நடுப்பகுதிக்கும் அக்டோபர் நடுப்பகுதிக்கும் இடைப்பட்ட நாட்களில் நடத்தப்படவேண்டியிருக்கும் ஜனாதிபதி தேர்தலே இன்று அரசியல் விவாதத்தை ஆக்கிரமித்திருக்கிறது. அதிலும் கூட அந்த தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுமா இல்லையா என்ற சந்தேகமே முனைப்பாக கிளம்பியிருக்கிறது.

தேர்தல்கள் ஒத்திவைப்பு என்பது விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வந்த பிறகு எப்போதுமே பேசுபொருளாக இருந்து வந்திருக்கிறது. கடந்த வருட முற்பகுதியில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய உள்ளூராட்சி தேர்தல்களை நிதி நெருக்கடியை காரணம் காட்டி அரசாங்கம் காலவரையறையின்றி ஒத்திவைத்தது. அவர் ஜனாதிபதியாக பதவியேற்பதற்கு வெகு முன்னதாக அவர் பிரதமராக இருந்த அரசாங்க காலத்திலேயே மாகாணசபைகளை நடத்தமுடியாமல் சட்டச்சிக்கல்கள் ஏற்படுத்தப்பட்டன.

ஒரு வருடத்துக்கும் அதிகமான காலமாக உள்ளூராட்சி தேர்தல்களும் இல்லை. ஆறு வருடங்களாக மாகாணசபை தேர்தல்களும் இல்லை.

தேர்தல்களில் மக்களிடம் செல்வதை தவிர்ப்பதற்கு தற்போதைய அரசாங்கம் தன்னாலியன்ற சகல பிரயத்தனங்களையும் செய்யும் என்ற வலுவான சந்தேகம் மக்களுக்கு இருக்கிறது.

தேசிய தேர்தல்களை ஒத்திவைப்பதற்கான ஒரு தந்திரோபாயமாக கடந்த இரு வருடங்களில் அவ்வப்போது அரசாங்க அரசியல்வாதிகள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு, பாராளுமன்ற தேர்தல் சீர்திருத்தங்கள் என்றெல்லாம் பேசிய சந்தர்ப்பங்களையும் நாம் கடந்துவந்திருக்கிறோம்.

தற்போது ஜனாதிபதி தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுமா என்ற சந்தேகம் கிளம்பியிருக்கிறது. அரசியலமைப்பின் பிரகாரம் ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க எண்ணற்ற தடவைகள் கூறியிருக்கின்ற போதிலும் கூட பொதுவெளியில் அந்த சந்தேகத்தைப் போக்க இயலாமல் இருக்கிறது. அதற்கு ஏற்றமாதிரியே அரசியல் நிகழ்வுப் போக்குகளும் அமைந்து விடுகின்றன.

உரிய காலத்துக்கு முன்கூட்டியே ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு விக்கிரமசிங்க நாட்டம் காட்டக்கூடும் என்று ஒரு கட்டத்தில் பேசப்பட்டது. ஜனாதிபதியின் ஐந்து வருட பதவிக்காலத்தில் நான்கு வருடங்கள் கடந்த பிறகு தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்கான அதிகாரம் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதிக்கு மாத்திரமே இருக்கிறது என்ற அரசியலமைப்பு ஏற்பாடு அப்போது சுட்டிக்காட்டப்பட்டது.

பிறகு மிகவும் அண்மையில் ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக்காலங்களை நீடிப்பதற்கு அரசியலமைப்பு திருத்தம் ஒன்றை கொண்டுவந்து அதை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பை நடத்தும் யோசனை ஒன்றை ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார முன்வைத்தார்.




சர்ச்சை பெரிதாக கிளம்புவதற்கு முன்னதாகவே விக்கிரமசிங்கவும் கட்சியினரும் அந்த யோசனையில் இருந்து தங்களை தூரவிலக்கிக் கொண்டனர்.

ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பில் மிகவும் அண்மைய வாரங்களில் கிளம்பிய சர்ச்சை ஜனாதிபதி தேர்தலுக்கு மூன்று மாதங்களுக்கும் குறைவான காலமே இருக்கின்ற நிலையில், தேர்தலுக்கு இடையூறாக வருமா என்ற ஐயத்துக்கு வழிவகுத்தது.

2015 ஆண்டில் ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைப்பதற்காக கொண்டுவரப்பட்ட அரசியலமைப்புக்கான 19வது திருத்தத்தில் ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகக் குறைக்கப்பட்டது. ஆனால், ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான நிபந்தனைகளை உள்ளடக்கிய சரத்தில் பொருத்தமான மாற்றத்தைச் செய்யாமல் ஆறு வருடங்கள் என்றே இருக்கவிடப்பட்டது.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதானால் அதற்கான அரசியலமைப்புத் திருத்தம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்படுவதுடன் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றில் மக்களின் அங்கீகாரமும் பெறப்படவேண்டும். அது சம்பந்தப்பட்ட சரத்தில் ஆறு வருடங்கள் என்று இருப்பதை ஐந்து வருடங்கள் என்று மாற்றுவதானால் சர்வஜன வாக்கெடுப்புக்கு போகவேண்டும்.

சர்வஜனவாக்கெடுப்பை நடத்தாமல் 19வது திருத்தத்தை நிறைவேற்றுவதில் அக்கறை காட்டிய அன்றைய அரசாங்கம் அந்த மாற்றத்தை செய்வதை தவிர்த்தது. ஜனாதிபதி தேர்தலை உரிய நேரத்தில் நடத்துவது குறித்து பாராளுமன்றத்தில் கடந்தவாரம் இடம்பெற்ற விவாதத்தில் இதை தமிழ் தேசிய கூட்டமைப்பின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற எம்.ஏ. சுமந்திரன் விளக்கிக் கூறியிருந்தார்.

சட்டரீதியான அந்த 'குறைபாட்டை' பயன்படுத்தி ஜனாதிபதி விக்கிரமசிங்க தனது பதவிக்காலத்தை ஒரு வருடகாலத்துக்கு நீடிப்பதற்கு முயற்சிக்கக்கூடும் என்று எதிரணி அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் சந்தேகம் கிளப்பின.

ஜனாதிபதியின் பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றம் தீர்மானம் ஒன்றை அறிவிக்கும் வரை ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளில் தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபடக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்குமாறு கோரி மொரட்டுவையை சேர்ந்த வர்த்தகப் பிரமுகர் ஒருவர் அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய்தார். அவரின் பின்னணியில் இருந்திருக்கக் கூடியவர்கள் குறித்து பல்வேறு ஊகங்கள் வெளியாகின.

அந்த மனுவை உயர் நீதிமன்றம் கடந்த வார முற்பகுதியில் நிராகரித்து நான்கு நாட்கள் கழித்து கடந்த வெள்ளிக்கிழமை ஒரு சட்டத்தரணி இன்னொரு அடிப்படை உரிமை மனுவை தாக்கல் செய் திருக்கிறார்.

அரசியலமைப்புக் கான 19 வது திருத்தம் உகந்த முறையில் பாராளுமன்றத்தில் நிறை வேற்றப்பட வில்லை என்பதால் அதை பொருத்தமான முறையில் நிறைவேற்றுவ தற்கு சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத் துவதற்கு வசதியாக ஜனாதிபதி தேர்தலை நிறுத்தி வைக்க உத்தரவிடுமாறு அந்த மனுவில் அவர் உயர்நீதிமன்றத் தைக் கேட்டிருக்கிறார்.

ஜனாதிபதியின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கான நிபந்தனைகள் அரசியலமைப்பின் 83 (பி) சரத்திலேயே கூறப்பட்டிருக்கின்றன. அதில் 'ஆறு வருடங்களுக்கும் மேலாக" என்பதை 'ஐந்து வருடங்களுக்கும் மேலாக' என்று மாற்றுவதற்கு அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றை கொண்டு வருவதற்கு ஜனாதிபதி விக்கிரமசிங்க சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை கடந்தவாரம் அங்கீகாரம் அளித்திருக்கிறது. இந்த பின்புலத்தில் வைத்தே எவரும் அந்த சட்டத்தரணியின் அடிப்படை உரிமை மனுவை எவரும் நோக்குவர் என்பதில் சந்தேகமில்லை.

ஜனாதிபதிக்கோ அல்லது அரசாங்கத்துக்கோ அந்த சட்டத்தரணியின் நடவடிக்கையுடன் தொடர்பு இருக்கிறதோ இல்லையோ அது வேறு விடயம். எப்பாடு பட்டேனும் ஜனாதிபதி தேர்தலை ஒத்திவைப்பதிலேயே ஜனாதிபதி குறியாக இருக்கிறார் என்று பிரசாரம் செய்வதற்காக அவருக்கு எதிரான அரசியல் சக்திகள் கூட அந்த சட்டத்தரணியின் பின்புலத்தில் இருக்கவும் கூடும். அந்த அடிப்படை உரிமை மனுவை உயர்நீதிமன்றம் எவ்வாறு கையாளப்போகிறது என்பதே இப்போது முக்கியமான கேள்வி.

மைத்திரிபால சிறிசேன தனது ஆட்சிக்காலத்தின் பிற்பகுதியில் 2019ஆம் ஆண்டில் தனது பதவிக்காலம் குறித்து உயர்நீதிமன்றத்திடம் வியாக்கியானத்தைக் கோரினார். 2015 ஜனவரியில் ஜனாதிபதியாக தெரிவானபோது ஜனாதிபதியின் பதவிக்காலம் ஆறு வருடங்கள் என்றே அரசியலமைப்பில் இருந்ததால் (பிறகு 19வது அரசியலமைப்பு திருத்தத்தில் அது ஐந்து வருடங்கள் என்று குறைக்கப்பட்டிருந்தாலும்) தன்னால் ஆறு வருடங்கள் பதவியில் இருக்கமுடியும் என்ற எதிர்பார்ப்பில் (நப்பாசையில்) தான் அவர் உயர்நீதிமன்றத்தை நாடினார்.

ஆனால், ஜனாதிபதியின் பதவிக்காலம் ஐந்து வருடங்கள் மாத்திரமே என்று உயர்நீதிமன்றம் அதன் தீர்மானத்தில் உறுதியாகக் கூறியது. அவ்வாறாக ஐந்து வருடங்களுக்கு முன்னரே உயர்நீதிமன்றம் கூறிவிட்டபோதிலும், பதவிக்காலம் தொடர்பில் அதுவும் அரசியலமைப்பின் பிரகாரம் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னமும் நூறு நாட்கள் கூட இல்லாத நிலையில் 'பல்வேறு அரசியல் கூத்துக்கள்" அரங்கேறுவதை காண்கிறோம்.

வெறுமனே ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் குறைகூறுவதைத் தவிர எதிரணி கட்சிகளினால் இந்த விவகாரத்தை உருப்படியாகக் கையாளமுடியவில்லை. அரசியலமைப்பின் பிரகாரம் உரிய நேரத்தில் நடத்த வேண்டிய தேர்தல் குறித்து பாராளுமன்றத்தில் விவாதிக்கவேண்டிய தேவை என்ன என்பதை புரிந்துகொள்ள முடியவில்லை.

இது இவ்வாறிருக்க, மூன்று பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களாக ஜனாதிபதி விக்கிரமசிங்க, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தி தலைவர் அநுரா குமார திசாநாயக்க ஆகியோரே களமிறங்கப் போகின்றனர். இவர்களில் பிரேமதாசவும் திசாநாயக்கவும் கடந்த வருடமே தாங்கள் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதை அறிவித்து பிரசாரங்களையும் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால், விக்கிரமசிங்க இன்னமும் வெளிப்படையாக தான் தேர்தலில் போட்டியிடப்போவதை அறிவிக்கவில்லை. அதற்கு அவர் தரப்பில் காரணங்கள் இருக்கலாம். அது வேறு விடயம்.

வெற்றிபெறுவதற்கான வாய்ப்பு இல்லை என்று கண்டால் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதை தொடர்ச்சியாக மூன்று தடவைகள் தவிர்த்த அவர் மீண்டும் அவ்வாறு செய்துவிடக்கூடும் என்ற சந்தேகம் அவரது ஆதரவாளர்களுக்கு இருக்கிறது போலும்.

சமூக ஊடகங்களில் 'ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ரணிலை உற்சாகப்படுத்துவோம்" என்று விசித்திரமான பிரசாரப் பதிவைக் காணக்கூடியதாக இருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# ஜோ பைடன் செய்ய மறுக்கும் 'அறிவாற்றல் சோதனை'



அமெரிக்க அதிபர் தேர்தலில் வயது மற்றும் மனநலம் முக்கியமான பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

தற்போதைய அதிபர் ஜோ பைடனின் வயது 81. அவருக்கு எதிராகப் போட்டியிடும் டொனால்ட் டிரம்பின் வயது 78. கடந்த மாதம் பைடன் நடத்திய மிகவும் பலவீனமான விவாத நிகழ்வு, இந்த விவகாரத்தைப் புதிய உச்சத்திற்கு எடுத்துச் சென்றது.

அமெரிக்காவின் மிகவும் வயதான அதிபராக இருக்கிறார் பைடன். தற்போது டிரம்ப் அதிபராகத் தேர்வு செய்யப்பட் டால் இரண்டாவது வயதான அதிபராக அறியப்படுவார்.

அறிவாற்றல் பரிசோதனை எனப்படும் காக்னிடிவ் சோதனையை மேற்கொள்ள மறுப்பதாக ஏ.பி.சி. நியூஸின் நேர்காணலில் பேசிய பைடன், தினம் தினம் இந்தப் பரிசோதனையை மேற்கொண்டு வருவதாகவும், அவரின் மருத்துவர்கள் மேலும் ஒரு சோதனை தேவையில்லை எனப் பரிந்துரை செய்ததாகவும் குறிப்பிட்டார்.

டிரம்போ அதிபர் பதவியில் இருந்த போது, மிக சமீபத்தில் என இரண்டு முறை இந்தப் பரிசோதனைகளை மேற் கொண்டதாகவும் அதில் சிறப்பாகச் செயல்பட்டதாகவும் கூறினார்.

அறிவாற்றல் சோதனை என்றால் என்ன? அது எதற்காகச் செய்யப்படுகிறது? அது எவ்வளவு கடினமாக இருக்கும்? இங்கு விரிவாகக் காண்போம்.

### அறிவாற்றல் தேர்வு என்ன செய்யும்?

மூளை எவ்வாறு செயல்படுகிறது என் பதை அறிந்துகொள்ளப் பல்வேறு சோத னைகள் இருக்கின்றன.

இவை குறிப்பிட்ட நோய்களைக் கண்டறியாது. ஆனால், நோய் அறிதலுக்கு மேலும் பல பரிசோதனைகள் தேவையா இல்லையா என்பதை உறுதி செய்ய உதவும் என்கிறது க்ளீவ்லாண்ட் கிளினிக்.

### இந்த அறிவாற்றல் பரிசோதனைகளை யாருக்குப் பரிந்துரைக்கலாம்?

பொதுவாக நினைவாற்றல், தனிமனித செயல்பாடுகளில் மாற்றங்கள் அல்லது சமநிலையாகச் செயல்படுவதில் ஒருவர் பிரச்னைகளைச் சந்திக்கும் பட்சத்தில்

கடந்த காலத்தின் சில பகுதிகளை மறந்துவிடும் பட்சத்தில்

அல்லது, ஒரு தகவலைப் புரிந்து கொள்வதில் சவால்களைச் சந்திக்கும் பட்சத்தில் இத்தகைய பரிசோதனைகளை பரிந்துரை செய்யலாம்.

மாண்ட்ரியல் காக்னிடிவ் அசெஸ்மெண்ட் (Montreal Cognitive Assessment (MoCA)) என்ற சோதனை பரவலாக மக்கள் மத்தியில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஸ்டான்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் கருத்துப்படி இது சந்தேகத்திற்குரிய குறைபாடுகளைக் கொண்டிருக்கும் மக்களின் அறிவாற்றல் திறனை விரைவாகச் சோதிக்கப் பயன்படுத்தப்படும் பரிசோதனை ஆகும்.

இந்தச் சோதனை ஒருவரின் நோக்கு நிலை, நினைவு, கவனம் மற்றும் பொருள்களுக்குப் பெயரிடும் திறன், வாய்மொழி மற்றும் எழுதப்பட்ட வாசகங்களைப் பின்பற்றுதல் போன்றவற்றை மதிப்பிடுகிறது. இத்தகைய சோதனைகளை நீங்கள் ஆன்லைனிலும் செய்து கொள்ளலாம்.

அறிவாற்றல் குறைகள் இல்லாத நபர்களுக்கு இது மிகவும் எளிமையான ஒன்றாக இருக்கும். ஆனால் மனநலம் குறையத் துவங்கும் நபர்களுக்கு இந்தச் சோதனைகள் மிகவும் கடினமானதாக இருக்கலாம்.

இந்தச் சோதனைகளைக் கண்டறிந்த கனடாவை சேர்ந்த நரம்பியல் நிபுணர் ஜியாத் நஸ்ரெதின், இது அமெரிக்கர்களுக்கு நம்பிக்கை அளிக்கும் அதே நேரத்தில் குறைபாடுகள் இருந்தால் அதையும் கண்டறிய முடியும் என்பதால் பைடன் இந்தச் சோதனையை மேற்கொள்வது நல்லது என்று கூறினார்.

### அறிவாற்றல் சோதனை எப்படி இருக்கும்?

கற்றல் மற்றும் நினைவாற்றல் தொடர்பான கேள்விகளை மருத்துவர்கள் நோயாளிடம் இந்தச் சோதனையின்போது




கேட்பர். நீண்ட மருத்துவ மதிப்பீடு என்பது அறிவாற்றல் சோதனைகளுடன் உடல் மற்றும் நரம்பியல் சோதனைகள், நோயாளிகளின் ஆரோக்கிய பிரச்னை குறித்த முழு விவரங்களை உள்ளடக்கியது.

கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் அமைந்திருக்கும் டேவிஸ் அல்சைமர்ஸ் நோய் ஆராய்ச்சி மையத்தின் இணை பேராசிரியர் டான் மங்கஸ், இந்த இரண்டாவது சோதனையானது பைடன் மற்றும் டிரம்பின் முழுமையான அறிவாற்றல் செயல்பாடுகள் குறித்த ஒரு முழுமையான தகவல்களை வழங்கும் எனக் குறிப்பிடுகிறார்.

முதலில் MoCA சோதனைகளைத் தான் மருத்துவர்கள் துவங்குவார்கள். அதன் முடிவுகள் சிறப்பானதாக இல்லாத பட்சத்தில் மிகவும் விரிவான பரிசோதனைகளை மேற்கொள்வார்கள். மிக நுட்பமான அந்தப் பரிசோதனைகளில் ஒருவரின் மொழி, செயல்படும் திறன், பார்வை மற்றும் இடம் சார்ந்த திறன்களை மருத்துவர்கள் ஆய்வு செய்வார்கள்.

உதாரணத்திற்கு மருத்துவர்கள் நோயாளிகளுக்கு கதைகளை வாசித்து அதில் வரும் பகுதிகள் பற்றிய கேள்விகளை எழுப்பி அவர்களின் நினைவாற்றல் மற்றும் கற்றல் திறனைச் சோதிப்பார்கள்.

சில வார்த்தைப் பட்டியல்கள், படங்களில் உள்ள பொருட்களின் பெயர்கள், குறிப்பிட்ட எழுத்தில் ஆரம்பிக்கும் பெயர் மற்றும் பொருட்களைக் கூறச் சொல்வார்கள்.

நோயாளிகளிடம் கேள்விகளைக் கேட்பது மட்டுமின்றி, நோயாளிகளிடம் அதிகமாகப் பேசும் நபர்களும் நோயாளிகள் அறிவாற்றலை இழக்கிறார்களா என்பதைக் கூற இயலும் என்று டாக்டர் மங்கஸ் பரிந்துரை செய்கிறார்.

குறிப்பிட்ட காலத்தில் நோயாளியின் அறிவாற்றலில் மாற்றங்கள் ஏற்படுகிறதா என்பதையும் காண வேண்டும் எனக் கூறும் டாக்டர் மங்கஸ் ஒருமுறை மட்டுமே செய்யப்ப[illegible]றான பாதையில் இட்டுச் செல்லலாம் என்கிறார்.

ஒருவர் முன்பிருந்த அறிவாற்றலை இழக்க ஆரம்பித்திருக்கிறார் என்றால் அவர் முன்பு எந்த நிலையில் இருந்தார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று கூறும் மங்கஸ், அறிவாற்றல் சோதனை மட்டுமே அனைத்தையும் முடிவு செய்வதில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

'என்னுடைய காலம் முழுவதும் நான் அறிவாற்றல் பரிசோதனைகளை மேற்கொண்டு வருகிறேன். ஒரு சாதாரண அறிவாற்றல் பரிசோதனை முடிவுகள் மட்டுமே ஒருவர் நல்ல அதிபராக இருப்பதை முடிவு செய்ய இயலும் என்பது ஏற்புடையதாக இல்லை,' என்று கூறுகிறார் அவர்.

### பைடன், டிரம்பின் வயது இந்தப் பரிசோதனைகளில் தேர்ச்சி அடையும் வாய்ப்புகளை வழங்குகிறதா?

சுமார் 65 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு, அவர்களின் அறிவாற்றலை அறிந்துகொள்ள இத்தகைய பரிசோதனைகளை மேற்கொள்ளலாம் எனப் பரிந்துரை செய்கிறது அமெரிக்க நரம்பியல் அகாடெமி.

வயது அதிகரிக்க அதிகரிக்க குறைபாடுகளும் அதிகரிக்கும் என்று கூறுகிறார் டாக்டர் நஸ்ரிதீன். 75 வயதாகிறபோது, 25 வீதமான நபர்களுக்கு அறிவாற்றல் குறைபாடுகள் இருக்கலாம் என்று எச்சரிக்கிறார் அவர்.

'அறிவாற்றல் குறைபாடுகள் தொடர்ச்சியாக இருந்து வருகிறது. ஆனால் சில நேரங்களில் மக்கள் இந்தக் குறைபாடுகள் இருப்பதைப் பற்றிய பிரக்ஞை ஏதுமின்றி இருக்கின்றனர்' என்று கூறும் அவர் அதிபரைப் பார்க்கவும் இல்லை, அவருக்கு சிகிச்சையும் வழங்கவில்லை.

கடந்த ஒரு வருடத்தில் பைடனிடம் ஏற்பட்ட மாற்றத்தைக் கவனித்ததாகக் கூறுகிறார் அவர். 'மக்கள் சந்திப்பின் போது அவர் மெதுவாக நடக்கிறார். அவரின் பேச்சு குறைந்துவிட்டது. அவரின் குரல் மிகவும் பலவீனமாக உள்ளது. சில நேரங்களில் அவர் வார்த்தைகளை முணுமுணுக்கிறார்' என்கிறார் நஸ்ரிதீன்.

பைடனின் வயதில் யாரும் இப்படி ஒரு முக்கியத்துவம் வாய்ந்த பணியை மேற்கொள்ளவில்லை என்று குறிப்பிடும் அவர், இந்த வயதில் ஒருவரின் இயல்பு நடவடிக்கைகளை விவரிப்பது கடினமான ஒன்றாக இருப்பதாகவும் கூறுகிறார்.

அதிபரின் இத்தகைய செயல்பாடுகள் சமீபத்தியதாகவே இருக்கின்றன என்று கூறும் அவர் இத்தனை ஆண்டுகளில் அவர் இப்படியாக இல்லை என்றும் குறிப்பிடுகிறார். இருப்பினும்கூட, பைடனை காட்டிலும் 3 ஆண்டுகள் மட்டுமே சிறியவராக இருக்கும் டிரம்ப் மிகவும் வேகமாகச் செயல்படுவதாகவும் மேற்கோள் காட்டுகிறார் நஸ்ரிதீன்.

### 25வது சட்ட திருத்தம்:

அமெரிக்க அரசமைப்பின் சட்டத்திருத்தம் 25, ஒரு அதிபர் இறந்துவிட் டால் அவருக்குப் பின் அந்தப் பதவியை வகிப்பது யார், அதற்கான செயல்முறை கள் என்ன, அவர் தன் பணியைச் சரியாகச் செய்யவில்லை என்றால் என்ன நடக்கும் என்பனவற்றைக் குறிப்பிடுகிறது.

அதிபர் ஒருவர் தன்னுடைய பதவியில் இருந்து விலகும்போது, பணி நீக்கம் செய்யப்படும்போது, உயிரிழக்கும்போது அல்லது பணி செய்ய இயலாதபோது இந்தச் சட்டத்திருத்தத்தை நடைமுறைப் படுத்தலாம்.

சமீபத்தில் விவாதப் பொருளாக மாறியிருக்கும் இந்தச் சட்டத் திருத்தம் முன்னாள் அதிபர் ஜான் எஃப் கென்னடியின் கொலைக்குப் பிறகு அங்கீகரிக்கப்பட்டது.

டிரம்ப் ஆட்சியின்போது, அமெரிக்க கூட்டாட்சி உறுப்பினர்கள், அதிபரின் உடல் தகுதியை உறுதி செய்ய மருத்துவக் குழு ஒன்றை உருவாக்கும் வகையில் சட்ட திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்று நினைத்தனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க தலைநகர் கலவரத்துக்குப் பிறகு இந்தத் தீர்மானத்திற்கு ஜனநாயகக் கட்சியினர் ஒப்புதல் வழங்கி, 25ஆம் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்தி, டிரம்ப்பை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என்று அன்றைய துணை அதிபராக இருந்த மைக் பென்சிடம் வேண்டுகோள் விடுத்தனர். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.

பைடனின் விவாத நிகழ்வில் ஏற்பட்ட தொய்வுக்குப் பிறகு குடியரசுக் கட்சியின் ஆதரவாளர்கள் பைடனின் அமைச்சரவையில் இருக்கும் நபர்களிடம் இந்தச் சட்டத் திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கூறினார்கள்.

இந்தச் சட்டத் திருத்தத்தின் பிரிவு 4இன் படி, துணை அதிபரும், அமைச்சரவையின் பெரும்பான்மையினரும், அதிபர் அவருடைய பணியை முழுமையாக நிறைவேற்ற முடியவில்லை எனும் பட்சத்தில், துணை அதிபர் அதிபராகப் பதவி ஏற்கலாம். ஆனால், அறிவாற்றல் குறைவதைக் கருத்தில் கொண்டு இது நாள் வரை இந்தச் சட்டதிருத்தம் பயன்படுத்தப்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளரை அயல்நாடு நாடி பிடிக்கிறது!

## இறக்குமதிகள் தந்த ஏமாற்றம் 'வாரிசு' அரசியலை நாடுகிறது!

பனங்காட்டான்

இப்பத்தியை எழுத ஆரம்பிப்பதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர் வெவ்வேறு விடயங்களுக்காக நான்கு பேருடன் உரையாடும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன்போது பெறப்பட்ட சில கருத்துகளின் தொகுப்பு இன்றைய பத்தி.

அந்த நால்வரில் ஒருவர் தமிழ் தேசிய அரசியலுடன் ஈடுபாடு கொண்டவர். இரண்டாமவர் நீண்டகால அனுபவ ஊடகர். மூன்றாமவர் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தில் அக்கறை கொண்ட சிவில் சமூக பங்காளி. அடுத்தவர் திருமலையைச் சேர்ந்த தமிழரசுக் கட்சியின் விசுவாசி.

பொதுவேட்பாளர் விடயம் எவ்வாறு போகிறது என்று இவர்களில் ஒருவருடன் கேட்டபோது, இப்போது ஐந்து தமிழ்த் தேசிய கட்சிகளையும் இணைத்த கூட்டின் பிரதிநிதிகள் கொழும்பில் இந்தியத் தூதுவருடன் பேசிக் கொண்டிருக்கின்றனர் என்று சுருக்கமாகச் சொன்னார். இதில் வியப்படைய ஒன்றுமில்லை. அண்மைக் காலங்களில் வழக்கமாக நடைபெறும் சந்திப்புகளில் இதுவும் ஒன்று என எண்ணிக் கொண்டேன்.

இதுபற்றி மேலும் அறிய மற்றொருவருடன் பேசினேன். எவ்வாறாவது பொது வேட்பாளரை இல்லாமற் செய்வதில் அயல்நாடு அக்கறை காட்டுகிறது என்று கூறினார். நான் அத்துடன் அவரை விட விரும்பவில்லை. பொதுவேட்பாளர் விடயத்தில் அக்கறை கொண்டவரான அவரிடம் பல விடயங்கள் பொதிந்து கிடந்தன. பின்வரும் விடயங்களை அவர் ஆழமாக விபரித்தார்.

அனுரகுமார திசநாயக்க ஜனாதிபதித் தேர்தலில் வெல்வதை அயல்நாடு விரும்பவில்லை. அநுர வென்றுவிட்டால் இலங்கை இன்னொரு மாலைதீவாக போய்விடுமென்று அவர்கள் அஞ்சுகின்றனர். அவர்கள் மட்டுமன்றி உலகப் பொலிஸ்காரரான நாடும் இதே போக்கில்தான் இருக்கிறது. இதுதான் இப்பவுள்ள முக்கிய விடயம் என்பதோடு அவர் நிறுத்தவில்லை.

'ரணில் வென்றாலென்ன, சஜித் வென்றாலென்ன அயல்நாட்டுக்குப் பிரச்சனை இல்லை. இவ்விருவரில் எவர் வென்றாலும் கொடுக்க வேண்டியதைக் கொடுத்து அவரை வளைத்து விடலாமென அது திடமாக நம்புகிறது. ஆனால், ரணில் வெல்வதிலேயே கூடுதலாக விருப்பம். அப்படியென்றால் தமிழரின் வாக்குகள் ரணிலுக்குத் தேவை. அந்த நிலையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவர் போட்டியிட்டால் ரணிலுக்கு சாதகமாக அமையாது' எனக் கருதும் இந்தியா எவ்வகையிலாவது பொதுவேட்பாளரை தடுக்கவே முனையும் என்று தமிழ் சிவில் சமூக பிரமுகர் கூறி முடித்தார்.

ஆனால், ஊடக நண்பர் தெரிவித்த கருத்துகள் வித்தியாசமான பார்வையில் இருந்தது. இன்னும் ஓரிரு வாரங்களில் ஜனாதிபதி தேர்தலுக்கான அதிகாரபூர்வ அறிவிப்பு வரவேண்டும். அதற்கிடையில் தெற்கில் குசுகுசு சந்திப்புகள் ஆரம்பமாகிவிட்டன. ரணிலும் மகிந்தவும் பசிலும் சில நாட்களுக்கு முன்னர் சந்தித்துள்ளனர். இதுபற்றிய விபரங்கள் வெளிவரவில்லை. மகிந்தவின் பெரமுனவைச் சேர்ந்த எழுபதுக்கும் அதிகமானவர்கள் - சில அமைச்சர்கள் உட்பட ரணில் பக்கம் நிற்கிறார்கள். இவ்வேளையில், பெரமுனவை பிளவுபடாது காப்பாற்ற வேண்டுமென்றால் ஒட்டுமொத்தமாக ரணிலுக்கு ஆதரவளிப்பது தவிர்க்க முடியாதது.

ஆனால், ரணிலுக்கு அதில் இஷ்டமில்லை. பெரமுன முழுமையாக தம்மை ஆதரிக்குமானால் சிறுபான்மை மக்களின் (தமிழர் மற்றும் முஸ்லிம்கள்) வாக்குகள் தமக்குக் கிடைக்காதென அஞ் சுகிறார். இந்த நெருக்கடியைத் தீர்க்க பெரமுன ஒருவரை வேட்பாளராக இறக்க வேண்டுமென விரும்புகிறார்.

> அரசியலில் எதனையும் நடக்காது என்று சொல்ல முடியாது. முனைப்புப் பெற்றிருக்கும் தமிழ்ப் பொதுவேட்பாளர் கருத்துருவாக்கம் இதிலொன்று. இது போன்று அடுத்த சில மாதங்களில் இடம்பெறப்போகும் பொதுத்தேர்தலில் திருமலை மாவட்டத்தில் 'ஐயா'வின் வாரிசு ஒருவரை களமிறக்க ஏற்பாடாகி வருகிறது என்று காதோடு காதாக ஒரு தகவல். இறக்குமதிகளால் கிடைத்த ஏமாற்றமே இதற்கான முக்கிய காரணமாம்.

அது, பெரும்பான்மையினரின் வாக்குகளுடன் சிறுபான்மையினரின் வாக்குகளைச் சேர்த்து தமக்கு வெற்றியைத் தரலாமென ரணில் கணிக்கிறார் என்று விளக்கிய ஊடக நண்பர், களநிலைவரம் நாளொரு வண்ணம் ஏறியிறங்கிச் செல்வதால் எதிர்பாராததை எதிர்பார்க்கலாமென்று சொல்லி முடித்தார்.

ரணில் நிச்சயம் போட்டியிடுவாரா என்ற ஒரு கேள்வியை, அதற்கான பதிலை முற்கூட்டியே தெரிந்து கொண்டும் அவரிடம் கேட்டேன். 'தேனில் கை வைத்தவர் அதனை சுவைக்காமல் விட மாட்டார்' என்ற சிங்களப் பழமொழியை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் நாடாளுமன்றத்தில் கூறியதை தனது கேள்விக்கான பதிலாக அவர் நினைவூட்டினார்.

இவ்வாறு உரையாடிக் கொண்டிருக்கையில், கொழும்பில் இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா தமிழ் தேசிய பிரமுகர்களுடன் நடத்தி முடித்த சந்திப்பின் முக்கிய விடயங்கள் கசியத் தொடங்கியது. இந்திய அரசு தமிழர் பகுதியில் மேற்கொள்ளும் - மேற்கொள்ள விரும்பும் அபிவிருத்திகள் பற்றி இச்சந்திப்பில் அலசப்பட்டதாயினும் தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் தமிழர் தரப்பு எவ்வளவு தீவிரமாக இருக்கின்றனர் என்பதை அறிவதில் இந்தியத் தூதுவர் அதிக நாட்டம் காட்டியுள்ளார்.

ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி என்ற பெயர் கொண்ட கூட்டின் ஐந்து கட்சிகளின் பிரதிநிதிகள் இச்சந்திப்பில் பங்குபற்றியிருந்தனர். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதாக சொல்லப்படும் சிங்கள சமூகத்தின் வேட்பாளர்கள் எவரும் தமிழர் பிரச்சனைக்கு உறுதியான தீர்வை அறிவிக்காததால் தமிழ்ப் பொதுவேட்பாளர் போட்டியிடுவது அவசியம் என்பதை தமிழர் தரப்பினர் இங்கு வலியுறுத்திக் கூறினர். (சில நாட்களுக்கு முன்னர் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருடன் நடைபெற்ற சந்திப்பில் புளொட் தலைவர் சித்தார்த்தன் தனிப்பட்ட முறையில் தமிழ்ப் பொதுவேட்பாளர் பற்றி என்ன கருதுகிறீர்கள் என்று வினவியபோது, அது நீங்கள் எடுக்க வேண்டிய முடிவு என்று அவர் கூறியதை இவ்வேளையில் நினைவிற் கொள்வது முக்கியமானது).

சம்பந்தன் தலைமையில் சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் இயங்கிய தமிழரசுக் கட்சி தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயத்தில் இரண்டு அணிகளாக இருப்பதையும் இவர்கள் இங்கே எடுத்துக்கூற மறக்கவில்லை. தமிழரசின் தலைவராக அண்மையில் தெரிவான சிவஞானம் சிறீதரன் பொதுவேட்பாளரை ஆதரிக்க, தலைவர் போட்டியில் தோல்விகண்ட சுமந்திரன் பொதுவேட்பாளரை எதிர்த்து வருவது பகிரங்கமானது. பொதுவேட்பாளரை தோற்கடிப்பேன் என்று சுமந்திரன் சூளுரைத்து வருவதை இந்தியத் தூதுவர் அறியாதிருக்க மாட்டார்.

தமிழர்களிடையே நிலவி வரும் ஒற்றுமையின்மையை முன்னிறுத்தி தமிழ்ப் பொதுவேட்பாளர் ஒருவரை கண்டுபிடிப்பது இயலாத காரியம் என்று ரணில் விக்கிரமசிங்க கூறியதும், எவ்வேளையிலும் பொதுவேட்பாளரை எதிர்த்தே நிற்பேன் என்று சுமந்திரன் முழங்கிவருவதும் ஒருபுறத்தே நடைபெற, மறுபுறத்தில் பொதுவேட்பாளர் விடயத்தை வெற்றிகரமாக்கும் முயற்சியில் சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்ற வேண்டுகோள் பரவலாக வருகிறது.

இதற்கிடையில் இன்னுமொரு போட்டியும் ஆரம்பமாகியுள்ளது. கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவராகவிருந்த சம்பந்தன் மறைவையடுத்து இவ்விடத்துக்கு யாரை நியமிப்பது என்பதுவே இந்தப் போட்டி. செயற்பாட்டில் கூட்டமைப்பு பிளவுபட்டு தமிழரசுக் கட்சி தனியாகவும், மற்றையவை இன்னொரு அணியாக இயங்கினாலும், நாடாளுமன்ற விவகாரங்களைப் பொறுத்தளவில் இவர்கள் அனைவரதும் தேர்தல் சின்னம் வீடு ஆகவும், நாடாளுமன்ற விவாதங்களில் பங்கேற்கும் நேரம் ஒதுக்குவதில் கூட்டமைப்பாகவும் இருப்பதால், திருமண பந்தத்தில் பிரிந்திருக்கும் கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் வாழுவதைப் போன்ற நிலையில் இவர்கள் உள்ளனர்.

இந்தத் தொங்குநிலைக் காலத்தில் இதற்கான நாடாளுமன்றக் குழுத்தலைவர் பதவி காலியானது பெரும் சோதனை. இவர்களுள் மூத்த நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் தலைமைப் பதவியை ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் கோருகிறார். புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தமது ஆதரவை இவருக்கு வழங்கியுள்ளார். கூட்டமைப்பின் பத்து எம்.பிக்களில் நால்வர் அடைக்கலநாதன் பக்கம். மிகுதி ஆறும் தமிழரசுக் கட்சியினர். எவ்வாறாவது இப்பதவியைக் கைப்பற்ற சுமந்திரன் ஒற்றைக் காலில் நிற்பதை மூன்று கட்சியினரும் அறிவர்.

ஜனாதிபதித் தேர்தல் தமிழ்ப் பொது வேட்பாளர் தெரிவுக்கு முன்னர் இந்தப் போட்டி வந்துள்ளது. இப்போதுள்ள நாடாளுமன்றத்தின் ஆயுள், ஜனாதிபதித் தேர்தல் முடிந்தவுடன் முடிவடையப் போகிறது. சொற்பகால பதவிக்கு அற்பத்தனமாக போட்டியிட நிற்கும் தமிழ்த் தேசிய பிரமுகர்கள் தமிழருக்கான அரசியல் தீர்வுக்கு ஒன்றுபடுவார்களென எவ்வாறு நம்ப முடியும்?

இறுதியாக, திருமலை தமிழரசுக் கட்சி பிரமுகரின் உரையாடலை நோக்கலாம். சம்பந்தனின் இறுதிச் சடங்கு காட்சிகளையும், அவரது குடும்பத்தினர் சில விடயங்களில் இறுக்கமாக எடுத்த முடிவுகளையும் அவர் விபரித்தார். தமிழரசுக் கட்சிக்குள் கொழும்பிலிருந்தும் கனடாவிலிருந்தும் இறக்கப்பட்ட இருவர் தற்போது எம்.பிக்களாக உள்ளனர். இவர்கள் இருவரையும் இறுதி நிகழ்வுகளில் எட்ட வைத்தே குடும்பத்தினர் காரியங்களை நிறைவேற்றியுள்ளனர். ஆனாலும் கொழும்பு இறக்குமதி அதனை வெளியில் காட்டிக் கொள்ளாது - நானும் நானும் என்பது போன்று முக்கிய பிரமுகர்களின் வருகையின்போது தன்னை முன்னிலைப்படுத்திக் கொண்டாரென்பது பகிரங்கமானது என அவர் கூறினார்.

சம்பந்தனின் இடத்துக்கு எம்.பியாக நியமனமாகியுள்ள சண்முகம் குகதாசனை முற்றுமுழுதாகவே திருமலையில் இடம்பெற்ற இறுதிச் சடங்கில் குடும்பத்தினர் அகற்றி விட்டதாகவும், அவரை எவரும் ஏறெடுத்தும் பார்க்கவில்லையென்றும் அப்பிரமுகர் கூறியது உண்மை. இறுதிச்சடங்கின்போது ஆங்காங்கே குகதாசனின் முகத்தையே பார்க்க முடிந்தது.


கட்சியின் வாரிசாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பிலிருந்து இறக்கப்பட்டவரும், திருமலைத் தொகுதியின் வாரிசாக கனடாவிலிருந்து இறக்கப்பட்டவரும் 'ஐயா' வின் காலை வாரி அவரை இயக்கமற்றவராகவும் காது கேட்காதவராகவும் பேசமுடியாதவராகவும் நையாண்டி பண்ணி, நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து அவரை இறக்குவதற்கு முயன்றவர்கள் என்ற மனத்தாக்கம் திருமலை மக்கள் மத்தியில் மேலோங்கி நின்றதை இறுதிச் சடங்கின் போது காலம் ஒளிப்பதிவு செய்து வைத்துள்ளது.

இவர்களின் துரோகத்துக்கான எதிரொலியாக சம்பந்தனின் பிள்ளைகள் மூவரில் ஒருவரை திருமலை மாவட்ட பொதுத் தேர்தலில் களமிறக்க இப்போது சில பிரமுகர்கள் செயற்பட்டு வருவதாக கட்சிப் பிரமுகர் காதோடு காதாகச் சொன்னது நிச்சயம் பொய்யாக இருக்காது.

நடக்காதென்று நினைப்பவைகள் நடக்கும் நாட்களைக் காண நீண்ட நாட்கள் காத்திருக்க வேண்டி வராது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் - அநேகமாக அடுத்தடுத்த மாதங்களில் பொதுத் தேர்தல் வரப்போகிறது. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் தேசிய அரசியலில் அடுத்து தோற்கப் போவது யார்?



யதீந்திரா

சில தினங்களுக்கு முன்னர் மூத்த அரசியல் தலைவர் இரா.சம்பந்தன் அவர்கள் காலமானார். எவ்வாறான விமர்சனங்கள் இருப்பினும், அவர் ஒரு ஆளுமைமிக்க அரசியல்வாதி என்பதில் இரண்டாவது பேச்சிற்கு இடமில்லை. இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் மத்தியில் வாழ்ந்த ஆளுமைமிக்க மிதவாத அரசியல் தலைவர்களில் ஒருவர் - அதே வேளை அவரது மறைவைத் தொடர்ந்து, இலங்கை தமிழரசு கட்சிப் பாசறையில் புடம்போடப்பட்ட ஆளுமைகளின் அரசியல் முடிவுற்றது. 1977இல் பொதுத் தேர்தலில், திருகோணமலை தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றதன் ஊடாக, அரசியலுக்குள் பிரவேசித்த இரா.சம்பந்தன், நான்கு தாசாப்தங்களுக்கும் மேலாக அரசியலில் இருந்த போதிலும் கூட, 2009இற்கு பின்னரான காலப்பகுதியைத்தான் அவரது காலமாக குறிப்பிட முடியும். ஒருவர் முழுமையாக அரசியலை தீர்மானிக்கும் ஆற்றலுள்ளவராக இருக்கின்ற காலம்தான், அவருக்குரிய காலமாகும். அந்த வகையில் 2010-2020 வரையான காலத்தில் சம்பந்தன் ஒரு தனிப்பெரும் ஆளுமையாகவே இருந்தார்.

சம்பந்தனின் மறைவைத் தொடர்ந்து அவரது அரசியல் அணுகுமுறைகள் தொடர்பில் பலவாறான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. சமூக ஊடகங்களில் அவர் அதிகம் விமர்சிக்கப்பட்டார். தூற்றப்பட்டார். அவரை ஒரு தோல்வியடைந்த அரசியல் தலைவராகவே பலரும் நோக்கினர். அவர் ஒரு தோல்வியடைந்த அரசியல்வாதி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்த இடத்தில் எழும் கேள்வி சம்பந்தன் மட்டும்தானா தோல்வியடைந்த அரசியல் தலைவர் அல்லது சம்பந்தனுடன் தமிழ் அரசியலின் தோல்விப்படலம் முற்றுப்பெற்று விடுமா?

1949இல், இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்டது. இதனை ஸ்தாபித்த, எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள், தமிழ் தேசிய இனத்திற்கு ஒரு அடையாளத்தை உருவாக்குவதையும், சமஸ்டி அடிப்படையிலான அரசியல் தீர்வு ஒன்றை பெற்றுக்கொடுப்பதையும் இலக்காகக் கொண்டிருந்தார். சமஸ்டித் தீர்வை அடையும் முயற்சியில் அவரால் வெற்றிபெற முடியவில்லை. அந்தத் தோல்வியை தனிநாட்டுக் கோரிக்கையின் மூலம் சமன் செய்ய முற்பட்டார். தனிநாட்டை எப்படி அடைவது என்பதற்கு அவரிடம் பதிலிருக்கவில்லை. இதன் காரணமாகவே தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்த தமிழர் விடுதலைக் கூட்டணியினர் பின்னர் மாவட்ட சபையை நோக்கி கீழிறங்கினர். செல்வா, தமிழ் தேசிய அரசியலில் தந்தை என்று அழைக்கப்பட்ட போதும், தனது பிள்ளைகளுக்கு தோல்வியையே விட்டுச் செல்லும் ஒரு தவைராகவே மறைந்துபோனார்.

செல்வநாயகம் அவர்கள் எவ்வாறானதொரு, அரசியல் தலைவர் என்பது தொடர்பில், அவரது மருமகன் கலாநிதி, ஏ.ஜே.வில்சன், இவ்வாறு குறிப்பிடுகின்றார். அதாவது, கேக் கிடைக்கவில்லை என்பதற்காக பாணை நிராகரிக்கின்ற தலைவர் அல்ல செல்வநாயகம். இந்த அடிப்படையில் நோக்கினால், தமிழர் விடுதலைக் கூட்டணியினர் மாவட்ட சபையை நோக்கி கீழிறங்கியதில் தவறு இல்லையென்றுதான் கூற முடியும். ஏனெனில் செல்வாநாயம் அவ்வாறானதொரு அரசியல் அணுகுமுறையையே போதித்திருக்கின்றார்.

செல்வா வழிவந்த தமிழரசு கட்சி மிதவாதிகள் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி மிதவாதிகள் ஆகியோரின் தோல்வியை தொடர்ந்தே, அதிருப்தியுற்ற இளைஞர்கள் அயுதப் போராட்டத்தின் மூலம் தனிநாட்டை அடைய முடியுமென்று நம்பினர், செயற்பட்டனர். அன்றைய சூழலில் 37 தமிழ் ஆயுத இயக்கங்கள் இயங்கியிருந்தன - அவற்றில் ஐந்து இயக்கங்களே பின்னர் பிரதான இயக்கங்களாக எழுச்சியுற்றன. தமிழ் மக்களுக்காக தனிநாட்டை காணப் போவதாக புறப்பட்ட இளைஞர் இயக்கங்கள், பின்னர் தங்களுக்குள் மோதி அழிந்து போனதே வரலாறு. இந்த இயக்கங்களின் பிரதான தலைவர்களான பத்மநாபா, சபாரத்தினம், உமா மகேஸ்வரன் எவரையுமே இலங்கை இராணுவம் கொல்லவில்லை. உள் மோதல்களினாலேயே அனைவரும் கொல்லப்பட்டனர். இவ்வாறு ஏராளமானவர்கள் கொல்லப்பட்டிருக்கின்றனர்.

1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் தமிழ் தேசிய அரசியலை ஒரு புதிய திசை நோக்கி நகருமாறு நிர்பந்தித்தது. இந்தியாவின் நேரடியான தலையீடு, தமிழ் தேசிய அரசியலைப் பொறுத்தவரையில் ஒரு வரலாற்றுத் திருப்புமுனையாகும். தமிழ் இயக்கங்களின் தனிநாட்டுக் கோரிக்கையை ஆரம்பத்திலிருந்தே இந்தியா ஆதரித்திருக்கவில்லை. அது இந்தியாவின் இலங்கை தொடர்பான அயலுறவுக் கொள்கையாகவே இருந்தது. இந்த விடயத்தில் இந்தியா நேர்மையாகவே நடந்துகொண்டது. அப்போது இந்தியாவின் இலங்கைக்கான விசேட தூதுவராக இருந்த பார்தசாரதி, இயக்க தலைவர்கள் அனைவருக்கும் ஒரு விடயத்தை மிகவும் உறுதிபடத் தெளிவுபடுத்தியிருந்தார். புளொட் தலைவர் சித்தார்த்தன் இப்போதும் இதற்கு ஒரு சாட்சியாக இருக்கின்றார். அதாவது, இந்தியா தனிநாட்டை ஒரு போதுமே, ஆதரிக்காது - அதே வேளை, அனுமதிக்கவும் மாட்டாது என்பதை பார்த்தசாரதி தெளிவாக வலியுறுத்தியிருந்தார். இந்தியாவினால் அனுமதிக்கப்படாத தனிநாட்டை, தன்னால் போராடிப் பெற முடியுமென்பதே, பிரபாகரனின் (விடுதலைப் புலிகளின்) நிலைப்பாடாக இருந்தது. விடுதலைப் புலிகள் அமைப்பு இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக, இலங்கைத் தீவின் அரசியலை தீர்மானிக்கும் பலத்துடன் இருந்தது என்பது உண்மை ஆனால் அதனை ஒரு அரசியல் பலமாக மாற்றுவதில் பிரபாகரனால் வெற்றிபெற முடியவில்லை. இந்த வரலாற்றுப் பின்புலத்தில் நோக்கினால், 1949 - 2009 வரையான காலப்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட தமிழ் தேசிய அரசியல் நகர்வுகள் அனைத்துமே தோல்வியிலேயே முடிவுற்றிருக்கின்றன.

விடுதலைப் புலிகளின் தோல்விக்கு பின்னரே சம்பந்தனின் தலைமைத்துவம் வெளித்தெரிந்தது. சமாதான பேச்சு வார்த்தைக் காலகட்டத்தில், சம்பந்தன் முழுமையாகவே, விடுதலைப் புலிகள் அமைப்பை ஏகப்பிரதிநிதியாக ஏற்றுக் கொண்டவராகவே இருந்தார். அவர்களது நகர்வுகளை நியாயப்படுத்தும் ஒருவராகவே இருந்தார். ஆனால் தீர்மானம் எடுக்கும் முடிவுகளில் செல்வாக்குச் செலுத்த முடியாதவராகவே இருந்தார்.



> இன்றைய சூழலில் தமிழர் அரசியல் நிலைமை என்பது - இருக்கின்ற நிலையிலிருந்து எவ்வாறு முன்னோக்கிப் பயணிப்பது என்னும் கேள்வியில் மட்டும்தான் தங்கியிருக்கின்றது. அந்தக் கேள்விக்கான பதிலில்தான் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது.

இந்தக் காலகட்டத்தில் சம்பந்தனால் என்ன செய்திருக்க முடியும்? நிச்சயமாக அவரால் எந்தவொரு அரசியல் மெஜிக்கையும் செய்திருக்க முடியாது. ஆனால் இந்தக் காலகட்டம் என்பது கடந்த காலத்திலிருந்து கற்றுக்கொண்டு, அரசியலை கையாளுவதற்கான காலமாகவே இருந்தது. தமிழ் தேசிய அரசியலில் உள்ள பிரதான தவறு என்னவென்றால், வாய்ப்புக்களை துல்லியமாக மதிப்பிட்டு, அதனை பற்றிக் கொள்வதற்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்கு மாறாக, உச்சமான ஒன்றைப் பெறப் போவதாகக் கூறி, அது நிறைவேறாத போது, மற்றவர்கள் மீது விரல் நீட்டுவதே தமிழர் அரசியலாகத் தொடர்கின்றது.

தமிழ் மக்களுக்கான வாய்ப்புக்கள் இரண்டு சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெற்றன - ஒன்று, 1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் அடுத்தது, நோர்வேயின் மத்தியஸ்தத்தின் கீழ் இடம்பெற்ற சமாதான பேச்சுவார்த்தை. ஒப்பீட்டடிப்படையில் இந்த இரண்டு சந்தர்ப்பங்களின் போதும், தமிழ் மக்கள் பேரம் பேசக் கூடிய நிலையில் இருந்தனர். பேரம் பேசக் கூடிய காலத்தில் பெறக் கூடியதை பெறுவதுதான் அரசியல் சாணக்கியமாகும். எல்லாவற்றையும் எனது காலத்திலேயே பெற்றுவிட வேண்டுமென்று எண்ணும் ஒரு அரசியல் தலைவரால், அவரை நம்பும் மக்களுக்கு எதனையுமே செய்துவிட முடியாது.

ஒப்பீட்டடிப்படையில் 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் அரசியல் சூழலை கனியச் செய்திருந்தது. அரசியலமைப்பிலுள்ள 13வது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் முன்னோக்கி செல்வதற்கான வாய்ப்பு பிரகாச மாகவே இருந்தது. ஆனால் சம்பந்தன் அதனை பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கவில்லை. புதிய அரசியல் யாப்பு என்னும் விசித்திர உலக வாதத்திற்குள் சிக்குண்டு கிடந்தார். அவரை தலைவராக ஏற்றுக்கொண்டவர்களையும், தனது தவறுகளுக்குள் சிறைப்படுத்தினார். அரசியலமைப்பிலுள்ள 13வது திருத்தச்சட்டத்தை அமுல்புடுத்துவதே கடினமான ஒரு விடயமாக இருக்கின்ற போது, எவ்வாறு அதனை தாண்டிச் செல்வதற்கான இணக்கப்பாட்டை தென்னிலங்கையில் ஏற்படுத்த முடியும்? சம்பந்தன் இதனை விளங்கிக்கொள்ள முடியாதளவிற்கு ஒரு பலவீனமான அரசியல்வாதி அல்ல - ஆனாலும், அவர் முன்னர் இழைக்கப்பட்ட தவறுகளின் நிழலிலேயே பயணம் செய்ய முற்பட்டார். அரசியலமைப்பின் 13வது திருத்தச்சட்டத்தை ஒரு ஆரப்பப் புள்ளியாகக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தியவர்களை அவர் புறம்தள்ளினார். 13வது திருத்தச்சட்டத்தை தாண்டி தான் அதிக தூரம் சென்றவிட்டதாகவே கூறிவந்தார். ஆனால், சம்பந்தனின் இறுதி நிகழ்வில் பேசிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, 13வது திருத்தச்சட்டத்திலுள்ள பொலிஸ் அதிகாரத்தை ஒரு பக்கமாக வைத்துவிட்டு, ஏனைய விடயங்களை அமுல்படுத்துவதற்காக அனைவரையும் ஒன்றுபடுமாறு அழைப்பு விடுத்திருந்தார். ஜனாதிபதியின் கருத்தானது, ஒரு வகையில், சம்பந்தனது அரசியல் தோல்வியை பறைசாற்றியது. ஏனெனில், ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து புதியதொரு அரசியல் யாப்பை கொண்டுவர முடியுமென்று சம்பந்தன் நம்பிக்கை கொண்டிருந்தார். இந்த அடிப்படையில்தான், 2015இற்கு பின்னரான காலத்தில் புதிய அரசியல் யாப்பு தொடர்பில் அதிகம் உரையாடப்பட்டது. ஆனால் அந்த முயற்சியானது, விழலுக்கிறைத்த நீர் என்பதை ரணிலே ஒப்புக் கொள்கின்றார், அதிலும் சம்பந்தனின் இறுதி நிகழ்விலேயே அதனை பதிவு செய்திருக்கின்றார்.

தங்களது அரசியல் நகர்வுகள் தோல்வியடைந்தால், அதற்கான பொறுப்பை அடுத்தவர் மீது சுமத்துவே தமிழர் அரசியலிலுள்ள மிகப் பெரிய பலவீனமாகும். தங்களது அரசியல் நகர்வுகளிலுள்ள தவறுகளை திருப்பிப் பார்க்க ஒரு போதுமே முயற்சிப்பதில்லை. அரசியல் என்பது அடிப்படையில் யார் எப்போது, எப்படி ஒன்றை அடைவது என்பற்கான சண்டையாகும். இந்த சண்டைக் களத்தில் குற்றச்சாட்டுகளுக்கு எந்த பெறுமதியும் இல்லை. ஆனால் தமிழ் அரசியல் தலைமைகளோ, தொடர்ந்தும் குற்றச்சாட்டுக்களிலேயே காலத்தை விரயம் செய்துவருகின்றது. சம்பந்தனின் இறப்பின் பின்னர் அவரது ஆதரவாளர்கள் பலர் அவர் சிங்கள அரசாங்கங்களால் ஏமாற்றப்பட்ட ஒருவர் என்று வர்ணித்திருந்தனர். இது தவறானதொரு அரசியல் புரிதலாகும். ஏனெனில் சூழ்சிகள் புரிவதும் அரசியலில் ஒரு அங்கம். அரசியல் தலைவர்கள் இதனை புரிந்துகொண்டுதான் செயலாற்ற வேண்டும். அவ்வாறு செயற்பாடாமல் இருப்பது அவர்களின் தவறாகும்.

இன்றைய சூழலில் தமிழர் அரசியல் நிலைமை என்பது - இருக்கின்ற நிலையிலிருந்து எவ்வாறு முன்னோக்கிப் பயணிப்பது என்னும் கேள்வியில் மட்டும்தான் தங்கியிருக்கின்றது. அந்தக் கேள்விக்கான பதிலில்தான் தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கின்றது. இதனை புரிந்து கொண்டு செயற்பட்டால் மட்டும்தான், அரசியலில் முன்னேற முடியும். சம்பந்தன் இதனை புரிந்து கொண்டு செயற்பட்டிருந்தால், ஒரு தோல்வியடைந்த தலைவராக அவரது வாழ்வு முற்றுப்பெற்றிருக்காது. சம்பந்தனுக்கு பின்னர் ஒரு தனித் தலைவராக அரசியலை தீர்மானிக்கக் கூடிய, ஒரு ஆளுமை தமிழர் அரசியலில் இல்லை. அண்மைக்காலத்தில் அதற்கான வாய்ப்பில்லை. ஆனால் எவர் தலைமை தாங்கினாலும், கடந்த காலத் தோல்விகளிருந்து கற்றுக்கொண்டு, சூழ்நிலையை கையாளும் திறனுள்ளவராக இருந்தால் மட்டுமே, அவரால் தமிழ் மக்கள் நன்மையை பெறுமுடியும். இல்லாவிட்டால், எவரிடம் என்ன ஆற்றல் இருப்பினும், அவரும் தோல்வி முகாமின் அங்கத்தவராகவே தனது அரசியல் வாழ்வை முடிக்க நேரிடும். இதுவரையான தமிழ் தேசிய அரசியல் வரலாற்றில் காலூன்றி எழுதுவதாக இருந்தால், தமிழ் தேசிய அரசியலில், அடுத்து தோல்வியடையப் போகும் அந்த அரசியல்வாதி யார் அல்லது அந்தக் கட்சி எது என்னும் கேள்வியே முன்னரங்கில் இருக்கின்றது. ஏனெனில் கடந்தகாலத் தவறுகளை களைந்து, சிந்திப்பதற்கும் செயற்படுவதற்கும் பதிலாக, முன்னைய தவறுகளின் நிழலில் சுகமாக அரசியல் அபயம் தேடவே அனைவரும் முயற்சிக்கின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சம்பந்தன் விட்டுச்செல்வது வெற்றிடமா அன்றித் திருப்பு முனையா?

கந்தையா அருந்தவபாலன்

அரைநூற்றாண்டுகளுக்கு மேலாக தமிழர் அரசியலில் முக்கிய பாத்திரங்களை வகித்து தனது தொண்ணூற்றோராவது வயதில் இயற்கை எய்திய இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களது பூதவுடல் கடந்த வாரம் திருகோணமலையில் தீயுடன் சங்கமமாகியுள்ளது. 1977 இல் பாராளுமன்ற உறுப்பினராக முழுநேர அரசியலில் கால்பதித்த அவர் எதிர்க்கட்சித் தலைவராக அமரும் இரண்டாவது தமிழராக 2015-18 காலப்பகுதியில் அப்பதவியில் இருந்ததுடன் அவரது விருப்பம் போலவே பாராளுமன்ற உறுப்பினராக இருந்துகொண்டே சென்ற 30 ஆம் திகதி தனது மூச்சை நிறுத்திக் கொண்டார். அவரது ஐம்பது ஆண்டு கால அரசியல் வாழ்வில் விடுதலைக்கான தமிழ் மக்களின் ஆயுதப் போராட்ட காலத்தின் இறுதிக் கூற்றும் அதன்பின்னரான கடந்த பதினைந்து ஆண்டு காலமும் வெவ்வேறு வகையில் தமிழினத்தின் பொறுப்பு அவரிடம் கையளிக்கப்பட்ட முக்கியமான பதவிக்காலங்களாக இருந்துள்ளன. 2009 வரை தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்தின் நியாயப்பாட்டைத் தெற்குக்கும் உலகிற்கும் எடுத்துக்காட்டுவதற்கான ஜனநாயக முகமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான தலைவர் பொறுப்பும் அதன்பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு மட்டுமன்றி தமிழ் மக்களின் போராட்டத்தை ஜனநாயக வழியில் கொண்டு சென்று அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்கான தலைமைப் பொறுப்பும் சம்பந்தன் அவர்களின் கைகளில் ஒப்படைக்கப்பட்டிருந்தது. விடுதலைப் புலிகளின் காலத்தில் வகுக்கப்பட்ட நடைமுறைகளின் கீழ் அவரிடம் வழங்கப்பட்ட பொறுப்பை ஆங்காங்கே சில பிசிறுகள் காணப்பட்டாலும் அவர் விரும்பியோ விரும்பாமலோ செவ்வனவே செய்து முடித்தார் என்பதில் மாற்றுக்கருத்துகள் இருக்க இடமில்லை. ஆனால் அதன் பின்னரான கடந்த பதினைந்து ஆண்டுகாலத்தில் முன்னரைவிடக் கனதியாக அவர்கையில் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை எவ்வளவுதூரம் அவர் சரிவர நிறைவேற்றியுள்ளார் அல்லது சரிவர நிறைவேற்ற முனைந்துள்ளார் என்பதை ஆய்வு செய்வதன் மூலமே சம்பந்தன் விட்டுச் செல்வது வெற்றிடமா அன்றி திருப்பு முனையா என்ற கேள்விக்கு நாம் விடை காணமுடியும்.

ஆயுதப் போராட்டத்தின் முடிவு, அதன் அரசியல் தொடர்ச்சி, அதன்பின்னரான மக்கள் ஆணை என்பவற்றின் அடிப்படையில் சம்பந்தனிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு என்பது மிகக் காத்திரமானதும் கடினமானதுமான பணியாகும். போராட்ட இலக்குகளை ஜனநாயகச் சூழலுக்கேற்பக் கையாள்வது, அதனை அடைவதற்காக பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் கிடைக்கின்ற அனைத்து வாய்ப்புகளையும் உச்சமாகப் பயன்படுத்துவது, அதற்காக மக்களின் விடுதலை உணர்வையும் ஒற்றுமையையும் கட்டிக்காப்பது, புலம்பெயர் உறவுகளை ஒன்றிணைப்பது, சர்வதேச ஆதரவை திரட்டுவது என்பவற்றுடன் சமகாலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தைச் சீரமைப்பது போன்ற ஜனநாயக வழியில் போராடும் ஒரு விடுதலை இயக்கத்துக்கான அத்தனை பணிகளும் தமிழ்த் தேசியக்க கூட்டமைப்பின் தலைவர் என்ற வகையில் சம்பந்தனிடமே மக்கள் ஒப்படைத்திருந்தனர். இப்பணிகள் மரபுசார்ந்த பாராளுமன்ற ஜனநாயக முறையில் வளர்ந்த தலைவர்களுக்கு இலகுவான விடயங்களல்ல எனினும் அவற்றுக்கிசைவாக இலகுவாக்கப்பட்ட அரசியற் களச்சூழல் தாராளமாகவே இருந்தது எற்பதற்கப்பால் இதுபோன்ற பாராளுமன்ற ஜனநாயகச் சூழல் ஒன்றிலேயே தந்தை செல்வாவின் தலைமையிலான இலங்கைத் தமிழரசுக்கட்சி மக்களிடையே விடுதலை உணர்வையும் மக்களின் ஒன்றுபட்ட திரட்சியையும் உரிமைகளுக்கான போராட்டங்களையும் வெற்றிகரமாக மேற்கொண்டிருந்தது என்பதையும் கவனிக்கவேண்டும். அதுவே பின்னர் எழுந்த ஆயுதப் போராட்டத்தின்பால் மக்களை இலகுவாக ஈர்ப்பதற்கு அடிப்படையாக அமைந்தது என்பதுவும் மறுக்க முடியாத உண்மை. அதேபோலவே ஆயுதப் போராட்ட காலத்தில் உருவாக்கப்பட்டிருந்த உச்சமட்ட விடுதலை உணர்வு, அதன்பால் கட்டிவளர்க்கப்பட்ட மக்களின் ஒற்றுமையும் திரட்சியும், புதிதாக வீறுகொண்டெழுந்த புலம்பெயர் உறவுகளின் அரசியல், நிதி பங்களிப்பு, இனப்படுகொலையாக அமையக்கூடிய யுத்தக் குற்றங்கள், காணாமல் ஆக்கப்பட்டார் பிரச்சினைகள், சிறிலங்கா அரசின் தொடர்ந்தேர்ச்சியான ஆக்கிரமிப்புக்களும் அடக்குமுறைகளும், ஐ.நாவின் தலையீடுகள், சர்வதேச நாடுகளின் கரிசனை போன்ற பல வாய்ப்பான காரணிகள் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை வென்றெடுப்பதற்கு அல்லது அடுத்த கட்டத்துக்கு முன்நகர்த்துவதற்கு சம்பந்தனுக்குக் கிடைத்திருந்தன என்பது மறுக்கமுடியாத உண்மையும் யதார்த்தமுமாகும். இக்களச்சூழலைச் சாதகமாகப் பயன்படுத்தி தமிழ்மக்களின் தன்னாடசி உரிமைக்கான போராட்டத்தை அடுத்த கட்டத்துக்கு நகர்த்த வேண்டுமென்றே மக்கள் தமிழித் தேசியக் கூட்டமைப்பிடமும் அதன் தலைவர் சம்பந்தனிடமும் எதிர்பார்த்தனர்.



**2009இற்குப் பின்னரான சம்பந்தனின் அரசியல் தம்மையும் தமது மக்களையும் எங்கே கொண்டுவந்து நிறுத்தியுள்ளது என்பதை இப்போதுள்ள தலைவர்களும் இனிவரவிரும்பும் தலைவர்களும் உணரவேண்டும். அதன்வழி சம்பந்தனின் வெற்றிடத்தை தமிழ் மக்களின் இலக்கு நோக்கிய திருப்புமுனையாக மாற்றுவதற்கு முதலில் அவர்கள் தங்களை மாற்றிக்கொள்ள முன்வரவேண்டும்.**

சம்பந்தன் தன்னிடம் வழங்கப்பட்ட பொறுப்பை உணர்ந்து செயற்பட்டாரா? தனது மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்ற முயற்சித்தாரா? இக்கேள்விகளுக்கு ஆம் என்று சொல்வதற்கு அவரது செயற்பாடுகளும் அவற்றின் மூலம் கிடைத்த பயன்களும் சான்றுகளாகக் காட்டப்படவேண்டும். பாராளுமன்ற உரைகளும் சம்பிரதாயபூர்வச் சந்திப்புகளும் தமிழ்த் தேசியப்பிரச்னைக்கு தீர்வு காண்பதற்கான பயனுறுதியான முயற்சிகளன்று. வேண்டுமானால் அவை கட்சி ஆதரவாளர்களைத் திருப்திப்படுத்தவும் எதிர்கால வாக்குகளுக்கும் உதவக்கூடும். பயனுறுதியான சான்றுகளைத் தேடிப்பார்த்தோமானால் நல்லாட்சிக் காலத்தில் ஒற்றையாட்சிக்குள் சமஷ்டி என்ற பதாகையின் கீழ் புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதாக ஒரு நாடகம் அரங்கேற்றப்பட்டதைத் தவிர வேறு முயற்சிகளையோ முடிவுகளையோ காண முடியவில்லை. இம்முயற்சியும் இறுதியில் தோல்வியிலேயே முடியும் என்று தொடக்கத்திலேயே ஆரூடம் கூறப்பட்ட ஒன்றுதான். ஏனெனில் தமிழர்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதில் சிங்களத் தலைவர்களின் அணுகுமுறைகள் எவ்வாறாக இருக்கும் என்பது தமிழ் மக்களுக்கு நன்றாகவே தெரியும். அதுவும் இந்த விடயத்தில் ரணில் எப்படியானவர் என்பது மக்களுக்கு அத்துப்படி. எந்தவொரு வெளிநாட்டு அழுத்தமுமின்றி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வு விடயத்தில் ஒரு அடியேனும் சிங்களத் தலைவர்கள் முன்னகரமாட்டார்கள் என்ற பட்டறிவு சாதாரண மக்களுக்கே வெளிச்சமாக இருக்கும்போது தந்தை செல்வாவின் காலத்திலிருந்து அரசியல் செய்துவரும் சம்பந்தனுக்கு அது விளங்காதிருக்க நியாயமில்லை. குறிப்பாக வெளிநாடுகளும் ஐ.நா மனித உரிமைப் பேரவையும் இலங்கை அரசுமீது அழுத்தங்களைப் பிரயோகிக்க முனைந்தபோது அவ்வழுத்தங்களைச் செறிவாக்கி இலங்கை அரசுக்கு நெருக்கடி கொடுப்பதற்குப் பதிலாக அவற்றிலிருந்து அரசைப் பிணையெடுக்கும் கைங்கரியங்களிலேயே அவரும் அவரது சீடனும் ஈடுபட்டு வந்தார்கள் என்பதை ஏற்றுத்தான் ஆகவேண்டும். முடிவு தமிழ்மக்களுக்கு ஏமாற்றம்தான் என்பதைத் தெரிந்துகொண்டுதான் புதிய அரசியலமைப்பு என்ற நாடகத்தில் சம்பந்தன் குழுவினர் நடித்தார்கள் என்பதே உண்மையானது.

தமிழ்த் தேசியப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாகச் சம்பந்தனிடம் தூரநோக்கோ அல்லது உறுதியான வழிவரைபடமோ இருந்தாகத் தெரியவில்லை. பதிலாக அந்தந்த நேரத் தீர்மானங்களும் அதற்கேற்றவாறான செயற்பாடுகளுமே காணப்பட்டன. மக்களால் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை உணர்ந்து சம்பந்தன் எதைச் செய்யவேண்டுமோ அதைச் செய்யாது மக்கள் எதைச்செய்யக்கூடாது எனக்கருதினார்களோ அதைச் செவ்வனே செய்து முடித்தார். சிங்களத் தலைவர்களுடன் ஐக்கியப்படுதல், சிங்கள மக்களின் மனங்களைக் குளிரச்செய்தல் என்பவற்றின் மூலம் தனது மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முடியுமென்ற இத்துப்போன அணுகுமுறையில் தென்னிலங்கையுடன் சங்கமமாகி எல்லோரும் ஏறிய குதிரையில் சக்கடத்தாரும் ஏறிய கதை போல இவரும் ஆகிப்போனார் என்பதை நாடறியும். இதற்காக இவர் செய்த காரியங்கள் பல தமிழர் மனங்களில் என்றும் மாறாத வடுக்களை உருவாக்கியிருந்தது. தமிழ் மக்கள் தம்மனங்களில் இன்றும் என்றும் நாயகர்களாகப் போற்றும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்றார். தமிழ்மக்களை கொன்றுகுவித்த மஹிந்தவை தேசியத் தலைவர் என்று மகுடம் சூட்டினார். அந்தத் தேசியத் தலைவரால்தான் தனது தொகுதிக்கு சுதந்திரமாகச் செல்ல முடிந்தது என அவர்களுக்கு மாலை சூட்டினார். தமிழினத்துக்கு எதிரான இனப்படுகொலை என்று நிறுவ முயற்சி எடுத்து இலங்கை அரசு மீது அழுத்தங்களை அதிகரிப்பதற்குப் பதிலாக, தாம் மேற்கொண்டது பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் என்ற தென்னிலங்கையின் நிலைப்பாட்டுக்கு ஆதரவான சாட்சியாகச் சம்பந்தனே மாறிக்கொண்டார். தானாக வந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியைக் கொண்டு தனது மக்களின் விடிவுக்கான ஆதரவை சர்வதேச மட்டத்தில் திரட்டுவதிலும் அல்லது அரசுடன் பேரம்பேசுவதிலும் ஈடுபடுவதற்குப் பதிலாக அரசாங்கத்துக்கு ஒத்தூதி தனக்கான சலுகைகளைப் பெற்றதே மிச்சம். இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சியாகச் செயற்பட்டது சம்பந்தன் காலத்தில்தான். சரி அவ்வாறு இதயத்தால் இணைந்து கூடிக்குலாவிய காலத்தில் குறைந்தது யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் போராளிகளுக்கும்உருப்படியாக ஒரு புனர்வாழ்வுத் திட்டத்தைத் தானும் உருவாக்கினாரா என்றால் அதுவுமில்லை. கம்பெரெலியா விளம்பரப் பலகையில் தங்கள் படம் வந்ததால் காணுமென்று திருப்திப் பட்டுக்கொண்டார்கள். பாராளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையில் ஆளுங்கட்சியின் தான்றோன்றித்தனமான செயற்பாடுகளுக்கு கடிவாளமிடுவது எதிர்க்கட்சியின் பணியாகும். சம்பந்தன் அப்பதவியிலிருந்தபோது எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் நாட்டுக்கும் நல்லது செய்யவில்லை. தமிழ்மக்களின் தலைவர் என்றவகையில் தமிழ்மக்களுக்கும் நல்லது செய்யவில்லை. ஆண்மையிழந்தவன் கையில் அழகான மனைவிபோல அந்த நான்கு ஆண்டுகள் வீணே கழிந்ததுதான் மிச்சம்.

தமது அரசியல் உரிமைகளுக்காக ஜனநாயக வழியில் போராடும் ஒரு தேசிய இனத்தின் பலம் மக்களின் அரசியல் விழிப்புணர்விலும் இலக்கு நோக்கிய ஒன்றுபட்ட திரட்சியிலும் தங்கியுள்ளது. அதனை முன்னெடுப்பது தலைவர்களின் கைகளில் உள்ளது. இதனை உணர்ந்து சம்பந்தன் செயற்பட்டிருந்தாரா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பதாகையின் கீழ் திரட்சியாகியிருந்த தமிழ் மக்களைப் சீதனமாகப் பெற்ற சம்பந்தன் அதனை அவ்வாறே பேணுவதற்கும் கட்டிவளர்ப்பதற்கும் துளியேனும் அக்கறை காட்டவில்லை. பதிலாக அதனை உடைப்பதிலும் உடைய விடுவதிலுமே விருப்பம் கொண்டிருந்தார் போலத் தெரிகிறது. உரல் தேய்ந்து உளிப்பிடியானது போன்ற நிலைக்கருத் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தள்ளிவிட்டது மட்டுமன்றித் தனது கட்சியையே இன்று நீதிமன்றத்தில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளார். முதலில் புலிநீக்கமென்று ஒரு கட்சியையும் பின்னர் தமிழ்த் தேசிய நீக்கம் எனச் சில கட்சிகளையும் தலைவர்களையும் கொத்திக்கலைத்ததுடன் இன்று தமிழரசுக் கட்சியை சிறிதரன் அணியினர் என்றும் சுமந்திரன் அணியினர் என்றும் எதிரெதிர் வசைபாடும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளார். தமிழ் மக்கள் தங்கள் தலைவர்கள் மீதும் எதிர்காலம் மீதும் நம்பிக்கை இழந்து விரக்தியடைந்தது ஒருபுறத்திலும் சிங்களத் தேசியக்கட்சிகளை நோக்கி மக்கள் தடம் மாறுவது மறுபுறத்திலும் நடக்கும் நிலையை ஏற்றபடுத்திய பெருமை சம்பந்தனையே சாரும். இன்று போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் பிரதான சக்தியாக உள்ள புலம்பெயர் உறவுகளை ஒரு குடையின் கீழ் கொண்டுவருவதற்கும் தாயகத்துடன் இணைத்து வலுப்படுத்துவதற்கும் தமிழர்களின பெருந்தலைவர் எத்தகைய முயற்சிகளை எடுத்தார்? நல்லாட்சிக் காலத்தில் சுவிஸ் நாட்டின் அரசியலமைப்பை ஆராயவென அரசாங்க அனுசரணையில் சென்று உல்லாசம் கொண்ட சம்பந்தன் புலம்பெயர் மக்களைச் சந்திப்பதற்காக எத்தனை தடவை சென்றார்? கனடாவில் சிலரை வைத்து கட்சிக்குக் காசு திரட்டியதுடன் அவரது புலம்பெயர் சக்திகளை ஒன்று திரட்டும் பணி முடிந்துவிட்டது.

தனிப்பட்டரீதியில் சம்பந்தன் தனது விருப்பங்கள் சிலவற்றை நிறைவேற்றிக் கொண்டாலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர் தோல்வி கண்ட ஓர் அரசியல்வாதி. சம்பந்தனின் அரசியல் தோல்வி என்பது தமிழினத்தின் தோல்வியாகும். அதனை அவரது இறப்பின் பின்னரான மக்களின் மனநிலை தெளிவாகவே பிரதிபலித்தது. தோல்வியடைந்த அரசியல்வாதியான சம்பந்தனின் வெற்றிடத்தை அவ்வாறு விடுவதே மேலானது. அவ்வெற்றிடத்தை அவர்போல ஒருவரால் நிரப்ப முனைவது தமிழர்களை மேலும் படுகுழிக்குள் தள்ளுவதாகவே அமையும். 2009இற்குப் பின்னரான சம்பந்தனின் அரசியல் தம்மையும் தமது மக்களையும் எங்கே கொண்டுவந்து நிறுத்தியுள்ளது என்பதை இப்போதுள்ள தலைவர்களும் இனிவரவிரும்பும் தலைவர்களும் உணரவேண்டும். அதன்வழி சம்பந்தனின் வெற்றிடத்தை தமிழ் மக்களின் இலக்கு நோக்கிய திருப்புமுனையாக மாற்றுவதற்கு முதலில் அவர்கள் தங்களை மாற்றிக்கொள்ள முன்வரவேண்டும். வாழுகின்ற அரசியல்வாதிகளுக்கு வாழ்ந்த அரசியல்வாதிகள் பாடமாக அமையவேண்டும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடா பீல் பிரதேச சொப்கா மன்றத்தின் 15வது ஆண்டுவிழா

**குரு அரவிந்தன்**

கனடாவின் பீல் பிரதேசத்தில் உள்ள சொப்கா குடும்ப மன்றத்தினர் தமது 15வது ஆண்டு விழாவை மிசசாகாவில் ஸ்ரிவ்பாங் வீதியில் உள்ள அனாபில்ஸ் மண்டபத்தில் அண்மையில் சிறப்பாக நடத்தினார்கள். மங்கள விளக்கேற்றி, அகவணக்கமும் அதைத் தொடர்ந்து தமிழ்த்தாய் வாழ்த்து, கனடா பண் ஆகியன இடம் பெற்றன. தொடர்ந்து வரவேற்புரையும் அதன் பின் மன்றத் தலைவர் யாழினி விஜயகுமாரின் உரையும் இடம் பெற்றன. இந்தவிழா சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் அவர் தனது உரையில் நன்றியைத் தெரிவித்திருந்தார்.

இந்த விழாவின் பிரமத விருந்தினராகக் கனடா காவல்துறை பெண் அதிகாரியான ஏவா ரட்ணகுமார் கலந்து கொண்டார். இளைய தலைமுறையினருக்கு ஏற்றவகையில் ஒழுக்கம், கட்டுப்பாடு சார்ந்து அறிவூட்டும் வகையில் அவரது உரை இடம் பெற்றிருந்தது. அடுத்து ஈசாபரா ஈசானந்தாவின் உரை இடம் பெற்றது.

அடுத்து இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட ரொறன்ரோ கல்விச் சபையைச் சேர்ந்த அனு சிறீஸ்கந்தராஜாவின் உரை இடம் பெற்றது. அவரது உரை இளைய தலைமுறையினரின் கல்வி சார்ந்ததாக அமைந்திருந்தது.




எனது 25 வருடகால ரொறன்ரோ கல்விச் சபை ஆசிரியர் பணியைப் பாராட்டி ரொறன்ரோ கல்விச்சபை பாராட்டுப் பத்திரம் வழங்கிய போது அவர்தான் அப்போது அதை மேடையில் வைத்து வழங்கி என்னைக் கௌரவித்திருந்தார். இவரது கணவர் பார்த்தி கந்தவேளும் ரொறன்ரோ நகரசபை 20 ஆம் வட்டார பிரதிநிதியாக இருக்கின்றார். இருவருமே தமிழ் மொழிவளர்ச்சியில் அதிகம் ஆர்வம் உள்ளவர்களாக இருக்கின்றார்கள்.

இந்த மன்றத்தின் முன்நாள் தலைவராகவும், தற்போது காப்பாளராகவும் நான் இருப்பதால் இளைய தலைமுறையினருக்கு உரையாற்றும்படி கேட்டிருந்தனர். நான் எனது உரையில், 'சொப்கா மன்றத்தின் இந்த ஆண்டு விழாவை இளையதலைமுறையினர் பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்துவதையிட்டுப் பெருமையாக இருக்கின்றது. 15 வருடங்களுக்கு முன் சிறுவர் சிறுமிகளாக இருந்தவர்கள் இன்று நிர்வாகக்குழுவில் அங்கம் வகித்து தமிழ் மொழியில் நிகழ்ச்சிகளை நடத்துவது பெருமைக்குரியது. புலம் பெயர்ந்த கனடிய மண்ணில் தமிழ் மொழி நிலைத்து நிற்காது என்று சொன்னவர்கள் இந்த நிகழ்வைக் கட்டாயம் பார்க்க வேண்டும். இங்கே பிறந்து வளர்ந்த மன்றத்தின் இளைய தலைமுறையினர் தமிழில் உரையாடி இந்த நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்துவதையிட்டு எல்லோருக்கும் பெருமையாக இருக்கின்றது. இளைய தலைமுறையினரிடம் எங்கள் மொழியைக் கொண்டு சேர்ப்பதில் நாங்கள் எடுத்த முயற்சி வீண்போகவில்லை என்பதை நேரடியாக இங்கே பார்க்கும் போது எமக்குப் பெருமையாக இருக்கின்றது.' என்று உரையின் போது குறிப்பிட்டிருந்தேன்.

தொடர்ந்து வீணை இசை, திரைப்படப் பாடல், சிறுவர் நாடகம், சிறுமிகள் நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. அதைத் தொடர்ந்து நன்றி உரை இடம் பெற்றது. சென்ற வருடம் நடந்த சொப்கா விழாவில் எனது நூல்களை விற்பனை செய்து அதில் கிடைத்த பணத்தை மருத்துவ மனைக்கு அன்பளிப்பாகக் கொடுத்திருந்தோம். அதேபோல நடைபயணம் மேற்கொண்டு அதில் சேகரித்த பணத்தை மருத்துவ மனையில் நோயாளர் தங்கும் ஒரு அறையைப் பராமரிப்பதற்கான செலவையும் கொடுத்திருந்தோம். இரத்தானம், உணவு வங்கிக்கு உணவு சேகரித்துக் கொடுத்தல், பூங்கா துப்புரவு செய்தல், முதியோர்களுக்கான பயிற்சிப் பட்டறை, தமிழ் மொழி வகுப்புகள் போன்றவற்றையும் சொப்கா மன்றத்தினர் செய்து வருகின்றனர்.






---




உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி
வியுக்தியார் பதில்கள்
ஈழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
viyukthiyar@gmail.com

**எம். அகிலேஸ்வரன்**
**சித்தன்கேணி.**

**கேள்வி:** : ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடத் தயாராகவுள்ள எந்தவொரு வேட்பாளரும் தமிழ் மக்களின் பிரச்னைக்கு திட்டவட்டமான - உறுதியான தீர்வை முன்வைக்க வில்லை. எனவே, வரும் தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளரை களமிறக்குவது அவசியம் என்று இந்தியத் தூதுவரிடம் ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியினர் தெரிவித்துள்ளனராமே?

**வியுக்தியார்:** இந்தத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகள்தான் தேர்தல் முடிவை தீர்மானிக்கும் வாக்குகளாக இருக்கும் என்று வேட்பாளர்களில் ஒருவரான அனுரகுமார திசநாயக்கா தன்னிடம் கூறியதாகவும் இந்தியத் தூதுவர், இந்தச் சந்திப்பில் கூறினாராம். அதாவது தமிழ் வாக்குகள் முக்கியமானவை என்பதால்தான், இவர்களைக் கூப்பிட்டு இந்தியத்தூதுவரும் சந்தித்திருக்கிறார். கிட்டத்தட்ட தமிழ் மக்களின் 'பலம்" இப்போதாவது தேவைப்படுகின்றது. இந்த நேரத்தில் தாம் விரும்புகின்ற ஒருவர் வெற்றிபெறவேண்டும் என்று இந்தியா நினைக்கும் என்பதும் தெரிந்ததுதானே. நமது இந்த ஐந்து கட்சிக் கூட்டணி இந்த விடயத்தில் உறுதியாக இருந்தால் நல்லதுதான்.

---

**சபா. சிவநாதன்,**
**குரும்பசிட்டி, தெல்லிப்பளை.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தலை ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் நடத்தியாக வேண்டும். அதுதான் அரசமைப்பு ஏற்பாடு. ஏதேனும் வகையில் அதை குழப்பி தேர்தலை பிற்போட முயற்சித்தால் ஜனாதிபதியையும் இந்த அரசையும் மக்கள் ஓட ஓட விரட்டியடிப்பர்கள் என்று யாழ்ப்பாண மாவட்ட எம்.பி. சுமந்திரன் பாராளுமன்றத்தில் எச்சரிக்கை விடுத்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** : கோட்டபாய நாட்டைவிட்டு தப்பியோட, அவரால் நியமிக்கப்பட்ட பிரதமரான ரணில் விக்கிரமசிங்க பதில் ஜனாதிபதியாக பதவியேற்க இருந்தபோதும் அவர் இப்படித்தான் எச்சரிக்கை விடுத்தார். அவர் ஒருநாள்கூட ஜனாதிபதியாக பதவியேற்கக்கூடாது என்று அறகலய காரர்கள் மத்தியில் அவர் விடுத்த கோரிக்கையை யாரும் கண்டுகொள்ள்வே இல்லை. இது நாள்வரை அவரது அரசியல் நடவடிக்கை எதிலும், மக்கள் மனநிலையை அறிந்த ஒருவராக அவர் தன்னைக் காட்டிக்கொள்ளவில்லையே.

---

**கந்தையா முகுந்தன்**
**சுவாமியார் வீதி, கொழும்புத்துறை.**

**கேள்வி:** ஜனாதிபதித் தேர்தல் பிற்போடப்படவேண்டும் என்பதே தமது நிலைப்பாடாகும் எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளாரே. தேர்தல் ஒன்று நடத்தப்பட்டால் தமிழ் மக்களே பாதிப்புக்குள்ளாவார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார். ஆனால் ஜனாதிபதி தேர்தல் நடந்தால் அதனால் தமிழ் மக்ககள் எதற்காக பாதிப்புக்குள்ளாகுவார்கள் என்கிறார் என்று உங்களுக்காவது புரிகின்றதா?.

**வியுக்தியார்:** அவர் நாளை என்ன சொல்கிறார் என்று பார்த்துவிட்டு சொல்கிறேனே. இன்று ரணிலை சந்தோசப்படுத்த இப்படிச் சொல்கின்ற அவர் நாளை காலை எழும்புகின்றபோது, ரணில் மீது ஏதேனும் கோபம் வந்தால், வேறு எதையாவது கூறுவார். எனவே ஒரு சில நாட்கள் பார்த்துவிட்டு பதில் சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும்.

---

**இரா. ஜெயருபன்,**
**பூந்தோட்டம், வவுனியா.**

**கேள்வி:** யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்ட இரா. சம்பந்தனின் பூதவுடல், தமிழ்அரசுக் கட்சியின் தலைமை பணிமனையிலும் தந்தை செல்வா கேட்போர் கூடத்திலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. மறைந்த பெருந்தலைவருக்கு பொதுமக்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் யாழ்ப்பாணத்தில் அஞ்சலி செலுத்தினரே. கொழும்பில் அவருக்கு அஞ்சலி செலுத்தியவர்கள் அளவிற்கு கூட யாழ்ப்பாணத்தில் அவருக்கு அஞ்சலி செலுத்த மக்கள் வராதது எதற்காக என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** அது எதற்காக என்பது உம்மிடமே நீர் கேட்டுப்பார்த்தாலே பதில் கிடைத்துவிடுமே. எமது அரசியல் தலைவர்கள் யாராவது இப்போது மக்கள் மனதில் இருந்தால்தானே அவர்கள் மறைகின்றபோது மக்களும் கண்ணீர் விடுவார்கள். அந்தக் காலத்தில் ஒன்று சொல்வார்கள். 'அரசியல் செய்வதற்கு பிணம் ஒன்று தேவை' என்று. அதுதான் சம்பந்தர் ஐயாவின் மரணச்சடங்குகளைப் பார்க்கின்றபோது ஞாபகத்திற்கு வருகின்றது. விடுதலைப் புலிகளால் படுகொலை செய்யப்பட்ட அ. அமிர்தலிங்கத்தின் மரணச்சடங்கில் அவருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நான்கு மணி நேரத்திற்கு மேலாக மக்கள் கியூவில் நின்ற காட்சிதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது. சம்பந்தனின் பூதவுடலை யாழ்ப்பாணம் கொண்டுவரவேண்டும் என்று முடிவெடுத்தவர்கள், தமிழ் மக்களின் மனநிலையை சற்றேனும் புரிந்துகொள்ளாதவர்களாகத்தான் இருக்க வேண்டும். அல்லது அவரை அவமானப்படுத்துவதற்காகவே இப்படிச் செய்தார்களோ தெரியவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சில் இடதுசாரிகளின் வெற்றி :
## தொங்கு பாராளுமன்றும்- அரசியல் முட்டுக்கட்டையும்!

ஐங்கரன் விக்கினேஸ்வரா




இன்னும் சில நாட்களில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ள நிலையில், பிரான்சில் எதிர்பார்க்கப்படாத அரசியல் மாற்றம் ஏற்பட்டுள்ளது. பல ஊடகங்கள் பிரான்ஸ் கலவர பூமி ஆகி இருக்கிறது என பெரிது படுத்தி கூறினாலும், பாரிஸ் இன்னமும் அமைதியாகவே உள்ளது.

பிரான்ஸ் வரலாற்றில் முன்னெப்போதும் இல்லாத தேர்தல் முடிவுகள் மற்றும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட அமைதியின்மை, இதெல்லாம், ஐரோப்பிய ஒன்றியத்தின் இரண்டாவது பெரிய பொருளாதார நாடான பிரான்சில் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையே.



**இடதுசாரிகளின் வளர்ச்சிக்கான முன்மொழிவு:**

ஜீன் லூக் மெலன்சொனின் (Jean-Luc Mélenchon) இடதுசாரி கூட்டணி தேர்தல் கால முன்மொழிவுகள் மக்களின் வாழ்வாதாரத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மீட்கும் என அறிவித்துள்ளது.

577 உறுப்பினர்களை கொண்ட பிரான்ஸ் நாடாளுமன்ற தேர்தல் ஜூன் 30 மற்றும் ஜூலை 7ம் தேதிகளில் இரண்டு கட்டங்களாக நடைபெற்றது.

இதில் அதிபர் இம்மானுவேலின் மையவாத கூட்டணி, ஜீன் லூக் மெலன்சொனின் இடதுசாரி கூட்டணி உள்ளிட்ட கட்சிகள் போட்டியிட்டன.

இந்த நாடாளுமன்ற தேர்தலில் இடதுசாரி கூட்டணி வெற்றி பெற்றாலும், எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காததால் அரசியல் முட்டுக்கட்டை நிலை தோன்றியுள்ளது. தேர்தலுக்கு பிந்தைய கருத்துக்கணிப்பில் இடதுசாரி கூட்டணி அதிக இடங்களை கைப்பற்றும் என கூறப்பட்ட போதும், எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை.

தற்போதய அதிபர் இம்மானுவேல் மக்ரோனின் மையவாத கட்சியின் தோல்விக்கு, 14 ஆண்டு கால ஆட்சியில் பண வீக்கம் தீவிரமாக அதிகரித்துள்ளமையே காரணமாகும் என கூறப்படுகிறது.

அதேவேளை பிரான்ஸ் நாட்டு வெளியுறவுக் கொள்கையில் 80 சதவீத மக்கள் பாலஸ்தீனத்திற்கு அங்கீகாரம் கொடுக்க ஆதரவாக உள்ள நிலையில் மக்ரோன் அதற்கு எதிராகச் செயல்பட்டு வருகிறார். அதேபோல நேட்டோ படைகளை உக்ரைனுக்கு அனுப்பி ரஷ்யாவுடன் போரை நடத்த மக்ரோன் ஐரோப்பிய ஒன்றியத்தில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார் என்ற அபிப்பிராயமும் மக்களிடத்தில் உள்ளது.

மேலும் பிரான்ஸ் விவசாயிகளுக்கான மானியங்களை வெட்டியது, உணவுப் பொருட்கள் கட்டுக்கடங்காத விலை உயர்வு ஆகியவற்றால் உள் நாட்டுப் பொருளாதாரம் மக்ரோனின் கட்சி ஆட்சியில் எந்த முன்னேற்றமும் பெறவில்லை. இவை மக்களுக்கு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

மொத்தமுள்ள 577 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான தேர்தலில், ஆட்சி அமைப்பதற்கு 289 இடங்களில் வெற்றி பெறுவது கட்டாயமாகிறது. இவ்வகையில் இந்த அரசியல் முட்டுக்கட்டையை நீக்க தொங்கு பாராளமன்றம் அமைக்க சாத்தியமும் உண்டு.

**இடதுசாரிகளின் மறு சீரமைப்புத் திட்டம் ?**

இந்நிலையில் 3லட்சத்து 80ஆயிரம் யூரோக்களுக்கு மேல் வருமானம் பெறும் அனைத்து செல்வந்தர்களும் அதிகவீத வரி விதிக்க இடதுசாரிகள் கூட்டணி முன்மொழிவை வைத்துள்ளது.

இதன் மூலம் அரசுக்கு கிடைக்கும் வரிவருவாயில் சமூக மேம்பாட்டு திட்டங்களை அமல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. மேலும் இக் கூட்டணி, குறைந்த பட்ச ஊதியத்தை அதிகரிப்பது, விலைக் கட்டுப்பாடுகளை அமல்படுத்துவது, ஓய்வூதிய வயதைக் குறைப்பது, பசுமை மாற்றம், பொதுத் துறைகளுக்கான முதலீடுகளை அதிகரிப்பது ஆகியவற்றை முன்மொழிந்துள்ளது.

அத்துடன் பிரான்சில் பொருளாதார சமத்துவமின்மையை சரி செய்வதற்கும், செல்வத்தை மறுபங்கீடு செய்வதற்கும் ஒரு வழியாக இந்த நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இடதுசாரிகள் கூட்டணி அதிக இடங்களை வெற்றி பெற்றிருந்தாலும் யாரும் பெரும்பான்மை பெறாத நிலையில் ஜனாதிபதி மக்ரோன் இடது சாரிகள் ஆட்சி அமைத்து விடக் கூடாது என்பதற்காக அந்நாட்டு பிரதமர் கேப்ரியலை இடைக்கால பிரதமராக நீடிக்க அழுத்தம் கொடுத்து வருகிறார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

**பாரிஸ் அரசியல் மாற்றம்:**

வலதுசாரி கொள்கை உடைய மரைன் லூா பென்னின் (Marine Le Pen) தேசிய பேரணி கட்சி ஆட்சியைக் கைப்பற்றும் என்று பரவலாக எதிர்பார்க்கப்பட்டது. அதே போல் முதல் கட்டத் தேர்தலில் தீவிர வலதுசாரி கட்சியான தேசிய பேரணி கட்சியே முன்னிலை பெற்றது.



இரண்டாம் கட்டத் தேர்தலுக்குப் பின்னர் இடதுசாரி கூட்டணி 182 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது. பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோனின் சென்ட்ரிஸ்ட் கட்சி 168 இடங்களில் வெற்றி பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளது. பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட வலது சாரி கட்சி 143 இடங்களைப் பெற்று மூன்றாம் இடத்துக்குத் தள்ளப் பட்டிருக்கிறது.

எந்த கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காத நிலையில், இடது சாரிகளுடன் கூட்டணி வைத்து அதிபர் இம்மானுவேல் மக்ரோன் புதிய அரசை அமைக்கலாம் என்று கூறப்படுகிறது.

மொத்தமுள்ள 577 நாடாளுமன்றத் தொகுதிகளுக்கான தேர்தலில், ஆட்சி அமைப்பதற்கு 289 இடங்களில் வெற்றி பெறுவது கட்டாயமாகிறது. இவ்வகையில் இந்த அரசியல் முட்டுக்கட்டையை நீக்க தொங்கு பாராளமன்றம் அமைக்க சாத்தியமும் உண்டு.

**பிரதமர் பதவிக்கு கடும் போட்டி:**

பிரான்ஸ் பிரதமர் கேப்ரியல் அட்டல், தனது பதவியை ராஜினாமா செய்வார் என தெரிவிக்கப்பட்டது. அடுத்த சில நாட்களில் புதிய பிரதமர் பதவி ஏற்பார்.

அப்படி அவர் விலகினால் அதிபர் மக்ரோன் தனது கொள்கைகளுக்கு எதிரான புதிய பிரதமருடன் பணியாற்ற வேண்டிய நிர்பந்தத்துக்கு ஆளாகுவார்.

இடது சாரி கூட்டணி கட்சித் தலைவர்களான, ஜீன் லக் மெலென்சாண், ஒலிவர் ஃபேர் மற்றும் மரைன் டாண் டெலியர் ஆகிய மூவரும் பிரதமர் பதவிக்கு ஆசைப்படுவதால், பிரதமர் பதவிக்கு உண்மையிலேயே கடும் போட்டி நிலவுகிறது.

இத்தேர்தலுக்கு முன்பாக பிரான்ஸ் உள்பட 27 நாடுகளை உள்ளடக்கிய ஐரோப்பிய நாடாளுமன்றத் தேர்தலில் அதிபர் இமானுவேல் மக்ரோன் கட்சி குறைவான உறுப்பினர்களை பெற்றது. இதையடுத்தே நடப்பு பாராளுமன்றம் கலைக்கப்பட்டு, இத் தேர்தல் நடாத்தப் பட்டது.

**நேட்டோ உச்சிமாநாட்டில் பிரான்ஸ் அதிபர்:**

இதற்கிடையே, தற்போதைய பிரதமர் கேப்ரியேல் அட்டல் தமது பதவியை ராஜினாமா செய்வதாக அறிவித்தார்.

நேட்டோ உச்சிமாநாட்டிற்காக வாஷிங்டனுக்குச் சென்ற பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மக்ரோன், நாட்டின் அடுத்த பிரதமர் யார் என இன்னமும் குறிப்பிடவில்லை.

மேலும் புதிய அரசு அமையும் வரை புதிய பிரதமர் குறித்த அறிவிப்பை வெளியிடப்போவதில்லை என்று பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மக்ரோன் தெரிவித்துள்ளார்.

அடுத்த சில நாட்களில் பிரான்ஸில் ஒலிம்பிக் தொடங்க உள்ளது. இவ்வேளையில் பிரான்ஸில் அரசியல் நிலை ஸ்திரமற்று உள்ளது.

இந்நிலையில்,தேர்தல் முடிவுகள் பிரான்ஸையே அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது. தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பாரீஸ் நகரம் எங்கும் வன்முறைப் போராட்டங்கள் அதிகரித்தன. கடந்த ஒரு வார காலம், பிரான்ஸ் தெருக்களில் வன்முறைகளும், கலவரங்களும், போராட்டங்களில், கட்டுக்கடங்காமல் வெடித்தன எனவும் சில ஊடகங்கள் தெரிவித்தன.

ஆயிரக்கணக்கான வலதுசாரி எதிர்ப்பாளர்களும் இடதுசாரிக் கட்சியினரும் பாரிஸின் தெருக்களில் வெள்ளம் போல் புகுந்தனர்.

அதிகரித்து வரும் வன்முறையை கலைக்க போலீசார் கண்ணீர் புகை குண்டுகளை பயன்படுத்தினர். போராட்டக்காரர்களில் பலர் கைது செய்யப்பட்டனர். இதற்கு பதிலடியாக, எதிர்ப்பாளர்களும் புகை குண்டுகளை வீசினர். இதனால் வன்முறை கட்டுக்கடங்காமல் போனது எனவும் சில சுயாதீன ஊடகங்கள் தெரிவித்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# அதிக புகை வெளியிடும் வாகனங்களை கறுப்பு பட்டியலில் சேர்க்க நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 14

அதிக புகை வெளியிடும் வாகனங்களை கறுப்புப் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

வீதியில் பயணிக்கும் இவ்வாறான வாகனங்கள் தொடர்பில் 0703500525 என்ற வட்ஸ்எப் இலக்கத்துக்கு முறைப்பாடுகளை அனுப்ப முடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வாகன அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக மாத்திரம் புகைப் பரிசோதனை சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டாம் என்றும் போலியான தந்திரோபாயங்கள் மூலம் புகைப் பரிசோதனை சான்றிதழைப் பலர் பெறுகின்ற போதிலும், பொலிஸ் அதிகாரிகள் மற்றும் மோட்டார் வாகனத் திணைக்கள அதிகாரிகள் வீதியில் வாகனங்களைச் செலுத்தும் போது நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் சோதனைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக புகை வெளியேறுவதை அவதானிக்கும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் உரிமையாளருக்கு எதிராக பராமரிப்பு உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும், இல்லையெனில் வாகனத்துக்குத் தடை உத்தரவு பிறப்பிக்கப்படும் எனவும் மோட்டார் வாகனப் போக்குவரத்துத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (எ)

# சந்தேகநபர்களை வெளிப்படுத்தி விசாரணைகள் நடந்த வேண்டாம்

## பொலிஸாருக்கு புதிய சுற்றறிக்கை


கொழும்பு, ஜூலை 14

கைது செய்யப்படும் சந்தேக நபர்களை ஊடகங்களுக்கு வெளிப்படுத்தி விசாரணைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவிக்கும் வகையில் புதிய சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.



பொலிஸாரினால் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில் தகவல்களை ஊடகங்களுக்கு அறிவிக்கும் போது பின்பற்ற வேண்டியவை குறித்து அறிவுறுத்தல்களை வழங்கி இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. (எ)

# 3 இளம் முதலீட்டாளர்களுக்கு வியாபார சான்றிதழ் வழங்கல்



கிளிநொச்சி, ஜூலை 14

கிளிநொச்சி மாவட்ட செயலக வளாகத்துக்குள் அமைந்துள்ள வியாபார நிலையத்தை நேற்றுத் திறந்து வைத்த பிரதமர் தினேஷ் குணவர்த்தன, மூன்று இளம் வியாபார முதலீட்டாளர்களுக்கு வியாபாரச் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

இதன்பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் விசேட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதமர் பல அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தியிருந்தார்.

விசேட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற துறை சார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டதோடு வடக்கு மாகாணத்துக்கான பல திட்டங்களும் முன்மொழியப்பட்டுள்ளன.

அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பாராளுமன்ற உறுப்பினர்களான எம். ஏ. சுமந்திரன், அங்கஜன் இராமநாதன், சிவஞானம் சிறீதரன், மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ். முரளிதரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (எ)

# இலங்கைக்கு சுற்றுலா பயணிகளால் 4. 3 பில்லியன் டொலர்கள் கிடைக்கும்

கொழும்பு, ஜூலை 14

இந்த ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை மூலம் 4. 3 பில்லியன் டொலர்கள் அரசுக்கு வருமானம் கிடைக்கும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இலங்கை சுற்றுலாத் துறையின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பில் தேசிய கொள்கைகள் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பௌதீகத் திட்டங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது, சுற்றுலா மற்றும் காணி அமைச்சை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட அதிகாரிகள் சுற்றுலாத் துறையின் எதிர்காலத் திட்டங்கள்



தொடர்பில் விளக்கமளித்தனர்.

இதற்கமைய, அண்மைக்காலத்தில் 2018 இல் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்ததாகவும், இந்த ஆண்டும் அதே அளவான சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என தாம் நம்புவதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

விசேடமாக, இந்த ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் 4. 3 பில்லியன் டொலர்கள் அரசுக்குக் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாக அதிகாரிகள் கூறினர்.

இதற்கமைய, சுற்றுலாப் பயணிகளின் வருகையின் போது, அது சம்பந்தமான உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வது தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டுமென குழு சுட்டிக்காட்டியது. அத்துடன் தற்போது, உலகில் அதிக சுற்றுலா ஈர்ப்பு கொண்ட மூன்று நாடுகளுக்குள் இலங்கை வந்திருப்பது தொடர்பில் அதிகாரிகளுக்கு குழு பாராட்டுக்களைத் தெரிவித்தது.

சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் 2023 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை, இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகத்தின் 2022 மற்றும் 2021 ஆண்டுகளின் ஆண்டறிக்கைகள், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மற்றும் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி நிதியத்தின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை மற்றும் இலங்கை சுற்றுலா ஹோட்டல் முகாமைத்துவ நிறுவனத்தின் 2021 ஆம் ஆண்டின் ஆண்டறிக்கை என்பவற்றுக்கு இந்தக் குழுவில் அனுமதி வழங்கப்பட்டது. (எ)

# ரிஷாத் பதியுதீன் பயணித்த வாகனம் விபத்தில் சிக்கியது

புத்தளம், ஜூலை 14

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் பயணித்த வாகனம் புத்தளம் - கருவலகஸ்வெவ பகுதியில் நேற்று விபத்துக்குள்ளானது.

ரிஷாத் பதியுதீன் அநுராதபுரத்திலிருந்து புத்தளம் நோக்கிப் பயணித்த போது, பிரதான வீதிக்குள் திடீரென பிரவேசித்த மோட்டார் சைக்கிள், பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த வாகனம் மீது மோதாமல் இருக்க சாரதி முயற்சித்ததில் குறித்த வாகனம் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது, பாராளுமன்ற உறுப்பினருக்கோ அல்லது மோட்டார் சைக்கிளில் பயணித்த நபருக்கோ எவ்வித காயங்களும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், பாராளுமன்ற உறுப்பினர் பயணித்த வாகனத்துக்கும், மோட்டார் சைக்கிளுக்கும் சிறியளவில் சேதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)



# பாடசாலை மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 14

முதலாம் தரம் முதல் 13 ஆம் தரம் வரை கல்வி கற்கும் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு ஜனாதிபதி நிதியத்தின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் உதவித் தொகையை வழங்கும் யாழ். மாவட்டத்துக்கான நிகழ்வு நேற்றையதினம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் தந்தை செல்வா மண்டபத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதியால் நேற்று முன்தினம் முதல் நாடு முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தத் திட்டத்தை 25 மாவட்டங்களிலும் செயல்படுத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நேற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று 14 ஆம் திகதியும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

மேலும், முல்லைத்தீவு, திருகோணமலை, பொலநறுவை மாவட்டங்களில் ஜூலை 18 ஆம் திகதியும் புலமைப் பரிசில்களை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.



உயர்தர மாணவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 6,000 ரூபாய் வீதமும், தரம் ஒன்று முதல் 11 வரையான மாணவர்களுக்கு 3,500 ரூபாயும் என 24 மாதங்களுக்கு வழங்கப்படவுள்ளன.

மேலும், புலமைப் பரிசில்களுக்கு விண்ணப்பிக்காதவர்கள் மீண்டும் புலமைப் பரிசில்களைப் பெற விண்ணப்பித்து அதனைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஜனாதிபதி நிதியம் அறிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விலகுகிறார்...

மொட்டு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்க தான் தயார் என அறிவித்து, அக்கட்சியால் முன் வைக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா நிறைவேற்றி வருகின்றார்.

தம்மிக்க பெரேராவுக்கு ஆதரவு வழங்கவேண்டும் என மொட்டு கட்சி எம்.பிக்கள் சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும், ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு வழங்க வேண்டும் என மொட்டு கட்சியின் முக்கிய உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதனால் ரணில் பக்கம் சாயும் நகர்வை மொட்டு கட்சி கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ள நிலையிலேயே தம்மிக்க பெரேரா, தனக்கு ஆதரவு வழங்கும் முடிவை மொட்டு கட்சி எடுக்காவிட்டால் அரசியலில் இருந்து ஒதுங்குவதாக தனக்கு நெருக்கமானவர்களிடம் குறிப்பிட்டுள்ளார். (அ)

## அமிர்தலிங்கம்...

ஏற்பாட்டில் வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் முன்றலில் அமைக்கப்பட்டுள்ள அமிர்தலிங்கத்தின் திருவுருவச் சிலையின் முன்றலில் இவ் நினைவேந்தல் முன்னெடுக்கப்பட்டது.

இதன் பொழுது ஈகச்சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டதோடு திருவுருவச் சிலைக்கு மலர் மாலையும் அணிவிக்கப்பட்டது.

நினைவேந்தலில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தமிழரசு கட்சியின் வட்டுக் கோட்டை தொகுதிக்கிளை தலைவருமான ஈஸ்வரபாதம் சரவணபவன், திருமதி யசோதா சரவணபவன், வலி மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நாகரஞ்சினி ஐங்கரன், முன்னாள் பிரதேச சபை உறுப்பினரான ஜெயந்தன், பண்ணாகம் அண்ணா கலை மன்றத்தினர், பண்ணாகம் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் பங்கேற்றனர். (அ)

## பெரமுன...

ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளரை நியமிப்பதற்கு ஏன் தாமதம் ஏற்பட்டது என்பது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள நாமல்,

பீதியடைந்து ஜனாதிபதி வேட்பாளரை அறிவிக்க மாட்டோம். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொள்கைகளுக்கு இணங்குகின்ற வேட்பாளரை இம்மாத இறுதியில் அறிவிக்க உள்ளோம். வேட்பாளரை நியமிப்பதில் நாம் அவசரப்படவில்லை.

பொதுஜன பெரமுனவின் கட்சிக் கட்டமைப்பு மிகவும் பலமாக உள்ளது. தேர்தல் அறிவிக்கப்பட்ட 4 முதல் 6 வாரங்களுக்குள் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய முடியும். எமது வேட்பாளர் ஏற்கனவே அடிமட்ட ஒழுங்கமைப்பை வெற்றிகரமாக மேற்கொண்டு வருகிறார்." என்றார். (அ)

## யாழ்ப்பாணத்தில்...

இணைப்பு அனுமதிக்கான விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படும் போது முறைகேடான விதத்தில் அனுமதிகள் வழங்கப்படுவதாகவும், மிக நீண்ட காலமாக விண்ணப்பித்தவர்களின் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் வேண்டுமென்றே கிடப்பில் போடப்பட்டுள்ளன என்றும், இவை குறித்து மின்சார சபையின் பொது முகாமையாளருக்கு முறைப்பாடு செய்த வாடிக்கையாளர் ஒருவர் பழிவாங்கப்படுவதாகவும் ஜனாதிபதியின் குறைகேள் அதி காரிக்கு முறைப்பாடு செய்யப்பட்டிருந் தது. இதனையடுத்தே ஜனாதிபதியின் செயலாளரினால் குறித்த விடயம் தொடர் பில் சுயாதீன விசாரணைகளை மேற் கொண்டு, அறிக்கையிடுமாறு ஜனாதி பதியின் செயலாளரினால் மின் சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் செயலாளரிடம் கோரப்பட்டுள்ளது. (அ)

## தமிழ்...

பங்கேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் முடிவு தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது முடிவை இன்னும் அறிவிக்காத நிலையிலேயே மாவை சேனாதிராசா இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் முடிவுக்கு தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தரப்பினர் பகிரங்கமாக எதிர்ப்பை வெளியிட்டு வரும் நிலையில் மாவை சேனாதிராசாவின் இந்தக் கருத்து வெளியாகியுள்ளது.

பொது வேட்பாளர் விடயம் குறித்து மாவை சேனாதிராசா மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்ப் பொது வேட்பாளரை ஜனாதிபதித் தேர்தலில் நிறுத்தும் முடிவு குறித்து இலங்கைத் தமிழரசுக் கட்சி தனது நிலைப்பாட்டை இன்னும் அறிவிக்கவில்லை. ஆயினும் இந்த விடயத்தை நான் வரவேற்கிறேன்.

இதனை மக்கள் ஆணை பெறும் விடயமாக அல்லாமல் நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு ஒரு முடிவில் இருக்கி றோம் என்பதை மீண்டும் தெளிவாக எடுத்துச் சொல்வதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தலாம். இதன் மூலம் தமிழ் மக்கள் அனைவரும் ஒரே முடிவில் உள்ளார்கள் என்பதை அனைத்து தரப்பினரும் இலகுவில் புரிந்துகொள்வார்கள்.

கடந்த காலங்களில் ஜனாதிபதித் தேர்தலில் பேரினவாதக் கட்சிகளுக்கு வழங்கிய ஆதரவினால் எதுவுமே நடைபெறவில்லை. தமிழ் மக்களாகிய நாம் ஏமாற்றப்பட்டதே வரலாறு. தமிழ் அரசியல் தரப்புகளையும் தமிழ் மக்களையும் பேரினவாதக் கட்சிகள் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றன. இம்முறை இதற்கு இடமளிக்காமல் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்தி எமது ஒன்றுபட்ட பலத்தை நிரூபிக்கமுடியும் - என்றார். (அ)

(இது தொடர்பான மேலதிக தகவல்கள் இன்று இரவு 7 மணிக்கு ஸ்பொட்லைட் நிகழ்ச்சியில்)

## வலுவான...

வலயமாக 1000 ஏக்கர் பரப்பளவில் பிங்கிரிய ஏற்றுமதி வலயத்தின் இரண்டாம் மூன்றாம் கட்ட அபிவிருத்தி பணிகளை ஆரம்பித்து வைக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்விலேயே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

எமது ஏற்றுமதி வருமானத்தைவிட இறக்குமதி செலவு அதிகமாக உள்ளதாகவும் இவ்வாறு முன்னோக்கிச் சென்றால் இன்னும் பதினைந்து வருடங்களில் மீண்டும் வங்குரோத்து நிலைவரும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தை பாதுகாத்துக் கொண்டு நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும் என்பதுடன், ஏற்றுமதி பொருளாதாரத்தை பலப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி கூறினார்.

## ஜனாதிபதி தேர்தலில்...

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு-

ஐக்கிய தேசியக் கட்சியில் தலைமைத்துவ பிரச்னை ஏற்பட்ட போது தலைவர் பதவிக்கு போட்டியிடுவதாக சஜித் குறிப்பிட்டிருந்தார். ஆனால் கடைசி நேரத்தில் பின்வாங்கி, கரு ஜய சூரியவை பலிகடாவாக்கினார்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்கெடுப்பின்போதும் அவர் களமிறங்காது டலஸ் அழகப்பெருமவை களமிறக்கி, அவரை பலிகடாவாக்கினார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் ஜனாதிபதியுடன் இணைந்த பின்னர் ஜனாதிபதி தேர்தலில் இருந்து பின்வாங்கும் முடிவை சஜித் எடுப்பார். அதனால்தான் அவர் தேர்தலில் போட்டியிடமாட்டார் எனக் கூறுகின்றோம். டலஸை களமிறக்கிவே கூட்டணி வைத்துள்ளனர் - என்றார்.

## 19ஆவது...

வகையில் நிறைவேற்றப்படாததால் அதனை பொதுமக்கள் கருத்து கணிப்புக்குட்படுத்தி நிறைவேற்றும் வரை ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது அரசியலமைப்பிற்கு முரணானது என தீர்ப்பு வழங்குமாறு கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு நேற்று முன் தினம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டத்தரணி அருண லக்சிறி உனவட்டுன இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் -

2015 ஜனாதிபதித் தேர்தலின்போது அரசமைப்பு மறுசீரமைப்புக்கு மக்களிடம் ஆணை கோரப்பட்டிருந்தது. ஜனாதிபதிக்கான பதவி காலத்தை ஆறில் இருந்து ஐந்தாக குறைத்தல், நாடாளுமன்றத்தின் ஆயுட் காலத்தை ஐந்தாக நிர்ணயித்தல், நிறை வேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரத்தை மட்டுப்படுத்தல் போன்ற திருத்தங்களும் அவற்றில் உள்ளடங்கும். அவற்றை அடிப்படையாகக்கொண்டே 19 ஆவது திருத்தச்சட்டம் முன்வைக்கப்பட்டது.

இது தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. மனுக்களை விசாரணைக்கு உட்படுத்திய உயர்நீதிமன்றம், அரச தலைவராக பிரதமர் இருத்தல் வேண்டும் என்பது உட்பட நான்கு விடயங்களை நிறைவேற்றுவதற்கு சர்வஜன வாக்கெடுப்பு அவசியம் என குறிப்பிட்டிருந்தது. இதனையடுத்து மேற்படி நான்கு விடயங்களும் கைவிடப்பட்டது.

அதேவேளை பதவிக்காலம் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற தர்க்கம் முன்வைக்கப்பட்டது. ஆறு வருடங்களை ஏழாக்குவதாக இருந்தால்தான் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம், ஐந்தாக குறைப்பதற்கு அவசியமில்லை என தெளிவாக தீர்ப்பளிக்கப்பட்டது.

எனவே, 19 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் உயர்நீதிமன்றம் தெளிவான தீர்ப்பை வழங்கியுள்ளது. 5 வருடங்களுக்கு பிறகு ஒருநாள்கூட ஜனாதிபதியால் அப்பதவியில் நீடிக்க முடியாது எனக் கூறப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி ரணிலுக்கு...

சர்வதேச சமூகம் மத்தியில் சிறந்த கௌரவம் காணப்படுகின்றது. எவரும் எதிர்பாராத வேகத்தில் நாம் அதை செய்துள்ளோம். இது பற்றி அறிய பலரும் ஆர்வமாக உள்ளனர். தேர்தலுக்கு பிறகு இது நடக்குமா என்ற கேள்வியும் எழுப்பட்டுவருகின்றது.

நாட்டை மீட்டெடுத்த தலைவர்தான் ரணில் விக்கிரமசிங்க. எனவே, நிலையானதொரு பொருளாதாரத்தை ஏற்படுத்த அவருக்கு மேலும் ஐந்தாண்டுகள் வழங்கப்பட வேண்டும்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலே இலங்கையின் தலைவிதியை நிர்ணயிக்கும். எனவே, உணர்வு அரசியலுக்கு பதிலாக வேலைத்திட்டங்கள் உடைய அரசியலுக்கே ஆதரவு வழங்கப்பட வேண்டும். - என்றார். (அ)

## தேர்தலுக்கு...

ஜனாதிபதித் தேர்தலை இடைநிறுத்த உத்தரவிடுமாறு கோரியும் 19 ஆவது திருத்தத்தை முறையாக நிறைவேற்று வதற்கு பொதுவாக்கெடுப்பு நடத்துமாறும் கோரியும் சட்டத்தரணி அருண லக்சிறி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனு ஒன்றை தாக்கல் செய்துள்ளார்.

சட்டத்தரணி அருண லக்சிறி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்துள்ள அடிப் படை உரிமை மனுவில், தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் அதன் உறுப்பினர்கள், பாராளுமன்ற பொதுச் செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

## கூட்டமைப்பு...

நிலையில், கடந்த புதன்கிழமை தமிழரசு கட்சி சார்பில் பாராளுமன்றத் துக்குத் தெரிவா னவர்களின் பாராளுமன் றக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

சித்தார்த்தனைத் தவிர ஏனையோர் இதன்போது பிரசன்னமாகி இருந்தனர். கூட்டத்தின் ஆரம்பத்தில் மேற்படி தலைமைப் பதவிக்குத் தன்னுடைய பெயரை செல்வம் அடைக்கலநாதன் தாமே பிரேரித்தார்.

அது குறித்து சிறிதரன் எம்.பி செல்வம் அடைக்கலநாதனை நியமிக்க ஆதரவு தெரிவித்தார். செல்வத்தை பாராளுமன்ற குழுத் தலைவராக நியமித்தால் பிளவுண்டு போயுள்ள கூட்டமைப்பை மீண்டும் ஒற்றுமைப்படுத்த வழி ஏற்படும் என்று கூறினார். ஆயினும் இதனை சுமந்திரன் எதிர்த்தார். இந்த முடிவில் தனக்கு உடன்பாடு இல்லை என்று கூறினார். பாராளுமன்றக் குழுத் தலைவராக செல்வத்தை நியமிக்க சாணக்கியன் எம்.பியும் தனது கடும் எதிர்ப்பை வெளியிட்டார்.

"செல்வம் தலைவராக இருப்பதில் ஆட்சேபனை ஏதுமில்லை. அவர் தலைவராக இருக்க, இதுவரை காலமும் இப்பணியை சம்பந்தன் சார்பில் ஆற்றி வந்த சுமந்திரனே அவற்றைத் தொடர்ந்து செய்யலாம்.

இருவரும் இணைந்து இந்தப் பணியை முன்னெடுக்க முடியும். முன்னெடுக்க வேண்டும். ஆயினும், செல்வமும் ஏனையோரும் இப்போது ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணி என்ற ஒரு புது கூட்டமைப்பை உருவாக்கி அதில் செயற்படுகின்றனர் என அறிவித்திருக்கிறார்கள்.

அவர்கள் அதில் இருந்து கொண்டு இங்கு தமிழரசு கட்சியின் பெயரில் இருக்கும் நாடாளுமன்ற குழுவுக்கு தலைமை தாங்க முடியாது. கூட்டமைப்பில் இருந்து கொண்டு தலைமை தாங்குவது வேறு. வேறு ஒரு கூட்டணியில் இருந்து கொண்டு இதற்குத் தலைமை தாங்குவது வேறு.

அப்படி அவர்கள் தலைமை தாங்குவதானால் அது குறித்து தமிழரசுக் கட்சியில் கட்சி ரீதியாக நாங்கள் சில விடயங்களை ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும்." - என்று சிறிதரன் தெளிவாக வலியுறுத்தினார்.

சுமந்திரனும் அக்கட்சியின் ஏனையோரும் அதே நிலைப்பாட்டை வெளிப்படுத்தினர்.

கூட்டமைப்பின் பெயரில் சுரேஷ் பிரேமச்சந்திரன் தரப்பை இணைத்துக் கொள்வதில் சிறிதரன் கடுமையான ஆட்சபனைகளை கலந்துரையாடலில் வெளிப்படுத்தினார்.

தங்களுடைய ஜனநாயகத் தமிழ் தேசியக் கூட்டணியை கைவிட்டு வர முடியாது, அதன் பெயரிலேயே செயற்படுவோம் என்ற உறுதியான நிலைப்பாட்டை செல்வம் தரப்பினர் வெளிப்படுத்தியமையால் தலைவர் தெரிவு முடிவெடுக்கப்படாமல் தள்ளிப் போயிற்று.

இறுதியில் தமிழரசுக் கட்சி, கட்சி ரீதியாக கூடி இந்த விடயத்தில் ஒரு முடிவை எடுத்து அறிவிக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் எம்.ஏ.சுமந்திரனை நாடாளுமன்ற குழுவின் தலைவராக நியமிக்க தமிழரசுக் கட்சியில் ஆலோசனைகள் நடத்தப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகிறது. (அ)

## தமிழ்...

உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கலந்து கொள்ள உள்ளார்.

இந் நிகழ்வில் சிறப்புரையை யாழ் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கலாநிதி கே.ரீ. கணேசலிங்கம் ஆற்றவுள்ளார்.

இதன் போது கலை நிகழ்வுகள், விசேட உரைகள் என்பன இடம்பெற்று மாநாட்டின் தீர்மானங்களும் அறிவிக்கப்பட உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## வாக்குச்சீட்டு அச்சிடுவதற்கு 800 மில்லியன் ரூபாய் தேவை

கொழும்பு, ஜூலை 14

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்கு 600 முதல் 800 மில்லியன் ரூபா வரை தேவைப்படுவதாக அச்சகத்தின் தலைவர் கங்கா கல்பானி லியனகே தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அறிவித்துள்ளார்.

ஜனாதிபதி வாக்குச் சீட்டின் அளவைப் பொறுத்து இந்த தொகை குறைக்கப்படலாம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தத் தேர்தல் தொடர்பான மக்கள் தொகைக் கணக்கெடுப்பு ஆவணங்கள் இதுவரை அச்சடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

## 4 ஆதார மருத்துவமனைகளில் கண்புரை பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 14

யாழ். மாவட்டத்திலுள்ள நான்கு ஆதார மருத்துவமனைகளில் மாதத்தில் ஒரு சனிக்கிழமை கண்புரை பரிசோதனை முகாம் நடைபெறுகிறது.

ஒவ்வொரு மாதமும் முதலாவது சனிக்கிழமை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையிலும் இரண்டாவது சனிக்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையிலும் மூன்றாவது சனிக்கிழமை சாவகச்சேரி ஆதார மருத்துவமனையிலும் நான்காவது சனிக்கிழமை ஊர்காவற்துறை ஆதார மருத்துவமனையிலும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை கண்புரை நோயாளர்களை தெரிவு செய்யும் பரிசோதனை முகாம் நடைபெறுகிறது என்று யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ)

## ஆசிரியர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளவேண்டும்!

### அமைச்சர் அரவிந்தகுமார்



கொழும்பு, ஜூலை 14

தற்போதைய கல்வி மறுசீரமைப்பின் ஊடாக, இந்த நாட்டில் கல்வித் துறையில் பெரும் வளர்ச்சியை ஏற் படுத்த முடியும் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

வருங்கால சந்ததியை உருவாக்கும் கௌரவமான சேவையாக ஆசிரியர்களுக்கு பாரிய பொறுப்பு உள்ளதால் ஆசிரியர்கள் அனைவரும் அதனை சரியாக புரிந்து கொண்டு மனசாட்சிப்படி செயற்படுமாறு இராஜாங்க அமைச்சர் வலியுறுத்தினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறுத் தெரிவித்தார்.

தொழிற் சந்தையை இலக்காகக் கொண்டு, ஐநூறுக்கும் மேற்பட்ட கொரிய, ஜேர்மன், பிரெஞ்சு, ஹிந்தி, சீன மற்றும் ஜப்பானிய மொழி ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும், இந்த நாட்டில் உள்ள 19 கல்வியியல் கல்லூரிகளையும் பல்கலைக்கழகங்களாக மாற்ற எதிர்பார்ப்பதாகவும் அந்தப் பல்கலைக்கழகங்களில் இருந்து 4 வருடங்களின் பின்னர் பட்டதாரி ஆசிரியர்கள் உருவாகுவார்கள் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் தற்போது கல்வியியல் கல்லூரிகளில் இணையும் 5,000 மாணவர்களின் எண்ணிக்கையை 7,500 ஆக அதிகரிக்கவும் எதிர்பார்ப்பதாக அவர் கூறினார்.

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் 7500 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ச்சி பெறுவதுடன், மேலும், விசேட தேவையுடைய பிள்ளைகளுக்காக பாடசாலைகளில் உள்ள வசதிகளை மேலும் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அவர்களுக்கு பயிற்றுவிக்க, பயிற்சி பெற்ற ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அத்தோடு, பாடசாலைகளில் பணம் அறவிடுவது சட்டவிரோதமானது என கல்வி அமைச்சு அறிவுறுத்தியுள்ளதால் இவ்வாறு பணம் அறவிடுவதைத் தடுக்க பெற்றோரும் ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார். (அ)

# வடமாகாண மக்கள் தெளிவு உள்ளவர்கள்!

### அமைச்சர் மனுஷ நாணயக்கார கூறுகிறார்



**கிளிநொச்சி, ஜூலை 14**

**வடக்கில் உள்ள மக்கள் அரச சேவைகள் கிடைக்கவேண்டும் என்பதில் தெளிவாக உள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.**

**கிளிநொச்சியில் இடம்பெற்ற நடமாடும் சேவை நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு கூறினார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அத்துடன், இன்று நாடு பாரிய ஆபத்தான நிலையிலிருந்து மீண்டு வரும் நிலையில் ஆசிரியர்கள் உள்ளிட்ட பலர் சம்பள அதிகரிப்பு கோரி போராட்டத்தில் ஈடுபடுவதுடன், நாட்டின் பொருளாதார நிலை தெரியாது இவ்வாறு நடந்து கொள்கின்றனர்.

உண்மையில் வடக்கில் உள்ள மக்கள் வித்தியாசமாக சிந்திக்கின்றார்கள். தமக்கு கிடைக்க வேண்டிய அரச சேவைகள் தொடர்பில் வழிப்புடன் நடந்து கொள்கின்றார்கள். தமக்கு கிடைக்க வேண்டிய சேவைகளை தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஊடாக அறிந்து கொள்வதுடன், அந்த விடயம் தொடர்பில் மாற்று சிந்தனையுடன் செயற்படுகின்றார்கள்.

நாட்டின் பொருளாதாரம் பாதாளத்திலிருந்து மீண்டு வரும் நிலையில் அரச உத்தியோகத்தர்களும் உணர்ந்து செயற்பட வேண்டும். பொது மக்கள் வடக்கில் விழிப்பாக செயற்படுவது போன்று நாடு முழுவதும் உள்ள மக்கள் விழிப்பாக செயற்பட வேண்டும் என்பதுடன், தமக்கு கிடைக்க வேண்டிய சேவைகள் கிடைக்கின்றனவா என மக்கள் அறிந்து கொள்ளவேண்டும்.

நாடு அதாள பாதாளத்தில் இருந்த போது, வெளிநாடுகளிலிருந்து நாட்டை மீட்க வேலை வாய்ப்புக்களை பெற்று சென்ற மக்களே செயற்பட்டனர். அவர்கள் உண்டியல் மூலமாக பணத்தை அனுப்பாது நாட்டின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டு டொலர்களாக அனுப்பியதால், இன்று அவர்களின் பெரும் பான்மையான பங்களிப்பாலேயே நாடு நிமிர்ந்து வருகின்றது - என்றார். (அ)

## வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் திறப்பு

கிளிநொச்சி, ஜூலை 14

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தொழில் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார இதனை திறந்து வைத்தார்.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் வெல்வோம் ஸ்ரீலங்கா நடமாடும் சேவை கிளிநொச்சியில் நேற்று இரண்டாவது நாளாகவும் இடம்பெற்றுவருகின்றது

கிளிநொச்சி மத்தியக்கல்லூரி மைதானத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. வெல்வோம் ஸ்ரீலங்கா திட்டத்தின் கிளிநொச்சி மாவட்ட நிகழ்வுகள் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் ஏற்பாட்டில் அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திணைக்கள செயலாளர், உதவி செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இளைஞர் யுவதிகளுக்கான எதிர்காலம் என்ற தொணிப்பொருளில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தர்ப்பங்களை பெற்றுக்கொடுத்தல் உட்பட தொழிலாளர் பிரச்னைகளுக்கு தீர்வு வழங்கும் செயற்பாடுகள் இங்கு இடம்பெற்றன.

இந்நிகழ்வில் , மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன் , அமைச்சின் உயரதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ)

## மக்கள் விரும்புகின்ற ஜனாதிபதியை தெரிவு செய்ய இடமளிக்கவேண்டும்!

### எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

கொழும்பு, ஜூலை 14

அரசியமைப்பிற்கு அமைவாக உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ள மக்களின் பறிக்க முடியாத இறையாண்மை மற்றும் வாக்குரிமை நடைமுறையில் மக்களால் பரிசோதிக்கப்படும் பிரதான தேர்தலான ஜனாதிபதி தேர்தல் எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கப்படக்கூடாது என எதிர்கட்சி உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எனவே, முடியுமான முதலாவது சந்தர்ப்பத்திலேயே தமக்கான நிறைவேற்று அதிகாரங்களைச் செயற்படுத்துவதற்கு மக்கள் விருப்பத்துடன் புதிய ஜனாதிபதியை நியமிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளனர்.

அரசியலமைப்பு சதிகளின் ஊடாக ஜனாதிபதித் தேர்தலுக்கு விடுக்கப்படும் அழுத்தங்களை தடுக்குமாறும் உரிய நேரத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தி உட்பட சுயாதீன எதிர்கட்சி உறுப்பினர்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் எழுத்து மூலமாக கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் 30 பேரின் கையொப்பத்துடனான கடிதத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் நிச்சயமாக தோல்வியடைய கூடும் என அச்சத்திலுள்ள தற்போதைய அரசாங்கம் 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலை பல்வேறு உத்திகளை கையாண்டு ஒத்திவைப்பது முயற்சிப்பது இரகசியமல்ல எனவும் அவர்கள் அந்த கடித்தில் தெரிவித்துள்ளனர்.

குறித்த செயற்பாட்டின் மற்றுமொரு உத்தியாக தற்போது தெளிவாக உயர்நீதிமன்றம் பொருள் கோரல் செய்துள்ள தற்போதைய ஜனாதிபதியின் பதவிகாலம் தொடர்பில் அரசியல் அமைப்பு ஏற்பாடுகளை திருத்தம் செய்வதற்கான சட்டமூலம் ஒன்றை கொண்டு வருவதாகும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் கூறியுள்ளனர். (அ)

## விபத்தில் சிக்கிய டிலான் பெரேரா

கொழும்பு, ஜூலை 14

பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவின் கார் விபத்துக்குள்ளாகியுள்ளது.

நேற்றுக் காலை மத்துகமவில் கூட்டம் ஒன்றுக்கு சென்று கொண்டிருந்த போது தெற்கு அதிவேக வீதியில் இந்த விபத்துக்கு டிலான் பெரேரா முகங்கொடுத்துள்ளார்.

இந்த விபத்தில் டிலான் பெரேராவுடன் பயணித்த நபரொருவர் காயமடைந்துள்ளார்.

கனமழை காரணமாக கார் சறுக்கி நெடுஞ்சாலையின் பாதுகாப்பு வேலியில் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 14.07.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org